திராவிடநாடு

27—3—60 | வார வெளியீடு | விலை 16 காசு

புது வாழ்வு

—[ஏ. சண்முகம்]—

—[OOO]—

வந்திடுமோ இனிப்புது வாழ்வு—தம்பி
தகர்ந்திடுமோ வறுமையுடன் தாழ்வு
இந்தநிலை மாறுவதும் என்றோ?—இதை
எண்ணாமல் வாழ்ந்திடுதல் நன்றோ?
வெந்தணலில் வீழ்ந்திட்ட வண்டாய்—நம்மை
வீழ்த்திவரும் வறுமையினைக் கண்டாய்!
அந்தமெனக் கலங்குகிறார் சான்றோர்—அதை
அகிலமெங்கும் சாற்றுகிறார் ஆன்றோர்!
விடுதலையைப் பெற்றுவிட்ட நாட்டில்—மக்கள்
வாடுகிறார் உணவுமின்றி வீட்டில்
கடுகளவும் முன்னேற்றம் இல்லை—இந்தக்
காங்கிரசார் ஆட்சியில்வீண் தொல்லை!
அடலேறு என்றுரைக்க வாராய்—எங்கும்
அறிவுப்படை தழைத்திடல்நீ பாராய்!
தென்னகத்தின் நற்புகழைப் பாடு—நீ
தேறிய அறிஞர்தமை நாடு
என்னுயிரின் இனிதெனவே போற்று—தமிழை
எங்கும் முரசடித்துச் சாற்று!

'தெய்வ' பயம்!

— பழநி —

"சார், தெய்வ பயம் என்ற தலைப்பில் என்னைப் பேசச்சொல்லி இருக்கிறார்கள் பள்ளியில்"

"ஓ, நீ பேச்சாளனாகிவிட்டாயா அதற்குள்?"

"இல்லை சார், மாணவர் கூட்டம். தலைமையாசிரியர் தலைமை வகிக்கிறார். ஆசிரியர்களும் வருகின்றனர். அங்கே நான் பேசவேண்டும்.

"பேசு பேசு. நன்றாகப் பேசு."

"அதுதான் சார் தெரியவில்லை: தெய்வ பயம் என்ற தலைப்பில் பேசுவதற்கு. நீங்கள் எழுதித் தருகின்றீர்களா?"

"என்ன! நான் எழுதித் தருவதா? சரிதான் போ! எழுதிக் கொடுத்ததை மனப்பாடஞ் செய்து அங்கே ஒப்பிக்கலாம் என்று எண்ணுகின்றாயா?"

"அப்படித்தான் எல்லாரும் செய்கின்றார்கள். அதுவும் இந்தத் தெய்வ பயம் என்னும் தலைப்பு மிகவும் குழப்பமாக இருக்கின்றது".

பையனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. குழந்தைகளுக்கு ஏற்ற தலைப்புகளையாவது இந்தப் பள்ளியாசிரியர்கள்எடுத்துத்தருவதற்கென்ன? பெரியவர்களையே குழப்பத்தில் ஆழ்த்தும் இது போன்ற தலைப்புகளைக் கொடுத்து ஏன் வதைக்கின்றார்கள் சின்னஞ் சிறார்களை! இவ்வேளை வெளியில் போயிருந்த என் நண்பர்—பையனின் தந்தை வந்தார். பையன் அவரைக் கண்டதும் மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவினான். "என்ன சிரிக்கிறீர்கள்?" என்று நண்பர் கேட்டவண்ணம் அருகில் அமர்ந்தார்.

என்னையறியாமல் நான் சிரித்திருக்கிறேன் போலும்!

அது சிரிக்கவேண்டிய கட்டம் அல்ல. ஆயினும் நான் ஏனோ சிரித்துவிட்டேன். நண்பர் திரும்பவும் கேட்டார். நான் செய்தியைச் சொன்னேன். அவர் பையனை அழைத்தார்.

"தெய்வ பயம் என்றால் உனக்குப் புரிகிறதா?" பையன் சற்றுத் தயங்கிவிட்டு 'ஏதோ, அரை குறையாகப் புரிகிறது' என்றான். அவன் குரலில் உறுதி ஒலிக்கவில்லை.

"புரிந்ததைச் சொல் பார்ப்போம்!"

"தெய்வத்துக்கு அஞ்சுதல். அதாவது நாம் எல்லோரும் தெய்வத்துக்கு அஞ்சி வாழவேண்டும்".

"ஏன் அஞ்சி வாழவேண்டும்?"

கனகு

பையன் திகைத்தான்.

"அவனிடம் போய்க் கேட்கின்றீர்களே, இதை. சின்னஞ் சிறுவன். பெரும் பெரும் தத்துவ ஆசிரியர்கள் எல்லாம் மயங்கிக் குழம்புகின்ற இந்தச் செய்திக்கு உங்கள் மகன் இலகுவில் பதில் கூறிவிடுவான் என்று நினைத்தீர்களா என்ன?" என்றேன் நான்.

"இல்லை, அவன் உளநிலை எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றது என்று பார்ப்பதற்காக அப்படிக் கேட்டேன்".

நான் பேசவில்லை.

"அவர்கள் தெய்வ பயம் என்ற தலைப்பைப் பொறுக்கி எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கோட்பாட்டின் படி பார்த்தால்கூட, உண்மையோடு நடந்துகொள்வதும் தெய்வத்துக்கு அஞ்சி நடக்கும் ஒரு செயல்தான். தெய்வத்துக்கு அஞ்சி நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் உண்மை பேசவேண்டும் என்பது அவர்கள் கோட்பாடு—அது கோட்பாடோ, கற்பனையோ! தெய்வத்துக்கு அஞ்ச வேண்டாம் என்று எண்ணுபவர்கள் உண்மை பேசவேண்டுவதும் இல்லை என்றுதான் அவர்கள் கூற்றுப்படி ஆகிறது. அதாவது 'பிறர் பொருளை நாடி, அதனைக் களவாடிக்கொண்டு வந்துவிடலாம் சந்தர்ப்பம் கிடைத்தால். ஆனால் காவற்காரன் இருக்கின்றான். அதனால் அங்கே போய் அந்தப் பொருளைத் திருட முனைந்து, காவற்காரனிடம் மாட்டிக் கொள்ளக்கூடாது. அது வெட்கக்கேடு. வினை வேறு வந்து சேரும்' என்று பேசுகின்ற கீழ்மைக் குணம் படைத்தோரின் மனப்பான்மைக்கும், 'தெய்வத்துக்கு அஞ்சி நடக்கவேண்டும். ஆகவே பொய் சொல்லக்கூடாது என்று பேசுகின்ற இந்த மதத் தலைவர்களும், அவர்களைப் பின்பற்றும் பக்தர்களும் பேசுகின்ற பேச்சுக்கும், அவர்தம் மனப்பான்மைக்கும் வேறுபாடே இல்லாமற் போகிறது".

"இதை எத்தனையோ தடவை, எத்தனையோ பெரியோர்கள் எத்தனையோவிதமாகச் சொல்லிவிட்டார்கள். இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீராத பெரும் வழக்கு இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. மதத்தின் பெயராலும், கட

(4-ம் பக்கம் பார்க்க)

குடியா முழுகிவிடும்?

ர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (27—3—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 37

எந்த ஒரு விஷயத்திற்கும், சென்னை அரசாங்கம் டில்லி சர்க்காரின் தயவையும் உத்தரவையும் எதிர்பார்த்து நிற்கும்நிலை மிகமிகமோசமானது—விரும்பத்தகாதது—வேண்டப்படாதது என்பதனை நாம் அடிக்கடி நினைவுபடுத்தி, இந்த விரும்பத்தகாத—ஜனநாயக முறைக்கு ஒவ்வாத இந்த முறையை — ஏற்பாட்டை மாற்றவேண்டும்—இல்லாமல் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

விஷயம் சிறிதோ, பெரிதோ, சாதாரணமானதோ முக்கியமானதோ, தேவையானதோ, தேவையற்றதோ என்ற எதற்கும் டில்லியின் தயவும் உத்தரவும்தான் தேவையென்றால், இங்கு—சென்னையில் தனியாக ஒரு அமைச்சரவையும், அந்த அமைப்பை நடாத்திச் செல்ல இருதிறப்பட்ட சட்டமன்றங்களும் தேவையில்லையே! நாலைந்தோ, ஏழெட்டோ, பத்துப் பன்னிரண்டோ—தேவைக்குத் தகுந்தபடி சில அதிகாரிகளை வைத்துக்கொண்டால் போதுமே!

சென்னை இராச்சியத்திற்கு எது தேவை—எப்போது தேவை என்பதை டில்லி சர்க்கார் தானாகவே அறிந்து, அந்த அதிகாரிகளைக்கொண்டு செயல்படுத்தலாமே!

உதாரணமாக ஒன்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சென்னை இராச்சியத்திற்குத் தேவையான மணியார்டர் தந்தி பாரங்களைச், சென்னையில் உள்ள மக்கள் புரியும்படி தமிழ் மொழியில் அச்சடித்துக்கொள்ள வேண்டுமென்றால்கூட, டில்லியின் தயவும் உத்தரவும் தேவைப்படுகிறது.

இதுபற்றி நமது எம். எல். ஏ. தோழர் கோவிந்தசாமி அவர்கள் கேட்டதற்கு நமது மாநில உள்நாட்டமைச்சர் பக்தவத்சலனார் கூறியிருக்கும் பதில் வேடிக்கையும் வேதனையும் கலந்ததாக இருக்கிறது.

> "சென்னை அரசாங்க அச்சகத்தில் தந்தி, மணியார்டர் பாரங்களைத் தமிழில் அச்சடிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவில்லை"

என்று கூறியிருக்கிறார்.

மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவில்லையாம் — நமது மதிப்பிற்குரிய மந்திரி கூறுகிறார் இவ்விதம்.

மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தைப் பார்த்து, "உங்களுக்குத் தேவையான தந்தி, மணியார்டர் பாரங்களை நீங்களே உங்கள் இராச்சியத்திலுள்ள அச்சகத்தில் அடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகின்ற நிலை இருந்தால், அது எவ்வளவோ மேல் என்று நாமே வரவேற்போம்.

ஆனால், டில்லி சர்க்கார் அந்த நிலையிலா இருந்து ஆட்சி புரிகிறது?

"நீங்கள் எந்த ஒரு காரியம் செய்வதானாலும் அதை எங்களிடம் கேட்டு, நாங்கள் அதற்கு ஒத்து உத்தரவு போட்டால்தான் செய்யவேண்டுமேயொழிய, உங்கள் இஷ்டப்படி எதனையும் செய்யக்கூடாது—முடியாது" — என்ற போக்கில்தானே ஆட்சியை நடாத்தி வருகிறது.

நிலைமை இப்படி இருக்க, நாம் ஒன்றைச் செய்வதற்கு அனுமதி தருக என்று கேளாமல் இருக்கும் போதே, "இது உங்களுக்கு நல்லது—தேவையானது, எனவே இதனை நீங்களே உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்" என்று டில்லி அரசு வலிந்து கூறும் என்று அமைச்சர் கருதுவாரானால், அது அமைச்சருக்கும் டில்லிக்கும் உள்ள 'நெருங்கிய பாசத்தைக்' காட்டுவதாக முடியுமே தவிர, உண்மையில் இப்படிப்பட்ட நல்ல காரியங்களில் அவருக்கு ஆர்வமோ அக்கரையோ இருக்கிறதென்று எப்படி நாம் நம்பமுடியும்?

இதற்கு மகுடம் வைத்தாற்போலுள்ளது—இது சம்பந்தமாக அமைச்சரளித்த இன்னொரு பதில்.

> "மத்திய சர்க்காரில் தற்போது இந்த இலாகாவை நிர்வகிப்பவர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்தான். அங்கத்தினர் கூறும் கஷ்டங்கள் அவருக்கும் தெரியும். ஆதலின் வேண்டிய நடவடிக்கைகளை அவர் எடுத்துக்கொள்வார் என்று நம்பலாம்"

டில்லியில், தபால் தந்தி இலாகாவை நிர்வகிப்பவர் ஒரு தமிழராம்! எனவே அவர் இதுபற்றிக் கவனித்துக்கொள்வாராம்! கூறுகிறார் இவ்விதம், பொறுப்பும் மதிப்பும் வாய்ந்த நமது அமைச்சர்.

உள்நாட்டுப் பொறுப்பு முழுவதையும் தன் கையில் வைத்திருக்கும் அமைச்சர் இதுபற்றி டில்லி சர்க்காரிடம் இங்குள்ள தமிழ் மக்களின் விருப்பத்தைத் தெரிவித்து, அதன் அவசியத்தை வற்புறுத்தினால் என்ன குடிமுழுகிப் போய்விடுமோ நாம் அறியோம்.

எதனையும் தட்டிக் கழிக்கும் போக்கும், இவர்கள் கேட்பதா நாம் செய்வதா என்ற நினைப்பும் ஜனநாயக முறைக்கு ஒத்து வராததென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

✻

2-ம் பக்கத் தொடர்ச்சி

வர் பெயராலும் வாழவேண்டியவர்கள் தங்கள் கட்சி, தங்கள் வாதம் வலுவிழந்தவை என்று உணரவும் செய்கிறார்கள். இருந்தாலும் தங்கள் சொத்தை வாதத்தை நாள்தோறும், நாள்தோறும் எடுத்துக் கூறிக்கொண்டு சுகவாழ்வு வாழ்ந்துகொண்டுதான் வருகிறார்கள்.”

பையன் நாங்கள் பேசியதை ஊன்றிக் கவனித்தான். எங்கள் பேச்சில் எந்த அளவு அவன் விளங்கிக்கொண்டானோ! தன் கோரிக்கையை என்னிடமோ, தன் தந்தையிடமோ மறுபடியும் அவன் கொண்டுவரவில்லை.

குறித்த நாளில், பள்ளியில் மாணவர் கூட்டம் நடந்தது. முடிந்துவிட்டது.

ஒரு நாள்:

என் நண்பராகிய பள்ளியாசிரியர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். எங்கள் பேச்சு எங்கெங்கெல்லாமோ சுற்றிக்கொண்டுபோய் முடிவாக என் நண்பரின் புதல்வன் அன்று பேசுவதற்கு எழுதித் தருமாறு கோரிய செய்திக்கு வந்தது. குறித்த பள்ளியைச் சேர்ந்தவர் தாம் அந்த ஆசிரிய நண்பரும்.

“அவன் அன்று தெய்வபயம் என்பதுபற்றிப் பேசினானா? என்ன பேசினான்?” என்று நான் அவருடன் வினவினேன்.

ஆசிரியர் சொன்னார்:

“அந்த வகுப்பிலேயே முதல் தரமான பையன் என்று பாராட்டும் பெற்றவன் அவன். அன்று அவன் ஏனோ வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப்பேசவில்லை. அதே சமயம், அந்த வகுப்பில் மிகவும் மோசமானவன் என்று கருதப்படும் வேறொரு மாணவன் தெய்வ பயம் என்று பொருள்பற்றிப் பேசினான். அவன் திக்காமல், திணறாமல் பேசினான் என்பதோடு, அவன் தான் முதற்பரிசையும் பெற்றான் என்பது எங்களுக்கெல்லாம் பெரு வியப்பை அளித்தது.

“அப்படியா...?” என்று நான் பேச வாயெடுத்தேன். அதற்குள் அவர் தொடர்ந்துவிட்டார்.

“அவன் எப்படி அந்த அளவுக்குப் பேசும் ஆற்றலைப் பெற்றான்” என்ற ஐயப்பாட்டை ஆசிரியர்களாகிய நாங்கள் எழுப்பிக்கொண்டிருந்த சமயம் தலைமையாசிரியர் எங்களிடம் வந்தார். அவ்வேளை பெற்றோர்கள் சிலரும் எங்களுடன் நின்றுகொண்டிருந்தனர்.

“பார்த்தீர்களா — நான் தயார் செய்த பையன் எப்படிப் பேசினான் என்று? ஒன்றும் தெரியாத மக்குப் பயல்கூட, என்னிடம் தனிப்படிப்புக்கு அனுப்பப்பட்டால் முதற் பரிசு பெறுவான் என்பதை இப்போதாவது புரிந்துகொள்வார்களோ, என்னவோ!” என்று அவர் தம்மைத்தாமே பாராட்டிப் பேசிக்கொண்டார்.

“உடன் நின்ற மாணவரின் பெற்றோர்கள்: எங்கள் பையன்களுக்கும் நீங்களேதான் தனிப்படிப்புக் கற்றுத்தரவேண்டும். நாள் ஒன்றுக்குக் கால்மணிநேரம் சொல்லித் தந்தால் போதும்' என்று அந்த இடத்திலேயே தலைமை ஆசிரியரிடம் வேண்டுகோள் விடுத்ததோடு, அச்சாரமும் உடனடியாக நீட்ட முனைந்தனர்.

“எல்லாரும்தான் தனிப்படிப்புச் சொல்லிக்கொடுக்கிறேன் என்று மார்தட்டிக்கொண்டு முன்னால் வருகிறார்கள். பார்த்தீர்களா என் தயாரிப்பை” என்று மேலும் தம்மைத் தாமே பாராட்டிக்கொண்டு, பெற்றோர்கள் நீட்டிய அச்சாரப் பணத்தை இருகரங்கள்கொண்டும் பெற்றுக்கொண்டார். வெற்றிப் போதையில் திளைத்துக்கிடந்தார் தலைமையாசிரியர். ஆசிரியர்களாகிய நாங்கள் எல்லோரும் வியப்பால் விறைத்துப்போய் நின்றோம்.

“தலைமையாசிரியர் அந்த வகையில் சிறப்பாளர் என்று பாராட்டப்பட வேண்டியவர்தாமே! அவர் தம்மைத் தாமே பாராட்டிக்கொண்டதுபற்றி எதையும் கூற இயலாவிட்டாலும், அவர் பாராட்டுப் பெற வேண்டியவர் என்பதுபற்றி இருவகை அபிப்பிராயம் இருக்க முடியாதே.” என்றேன் நான்.

“தலைமையாசிரியரின் திறமை கண்டு நான்--அசூயை--பொறாமை கொண்டு பேசுகிறேன் என்று எடுத்துக்கொண்டுவிடாதீர்கள். நானும் சில மாணவர்களுக்கு தனிப்படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் தற்காலிகவெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகக் குறுக்கு வழியில் எதையும் சொல்லித்தர விழையவில்லை”

“நீங்கள் சொல்வது புரியவில்லையே! கற்றுக்கொடுப்பதில் குறுக்கு வழி வேறு, நேர் வழி வேறா?”

“ஆமாம், நாடக நடிகர்கள் உரையாடலை மனப்பாடம் செய்துகொண்டு மேடையிற் பேசுவது போல் தேர்வில் வெற்றி பெறுவதற்குத் தேவையானவற்றை மட்டும் குருட்டுப் பாடமாக நெட்டுருப் போடச் சொல்லி, அதனை எழுதவும், பேசவும் செய்வதுதான் குறுக்கு வழி, அதனால் மாணவர்கள் பெறுவது நல்ல பயனாக ஒன்றுமே இல்லை என்றுதான் நான் சொல்வேன்.

“உள்ளவற்றை அப்படியே உணருமாறு கற்பித்து மாணவர்களின் உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்தி, அந்தத் தெளிவின் மூலம், தேவையானபோது மாணவர்கள் தாமே தங்கள் சொந்த அறிவைப் பயன்படுத்திப் பதில் கூறுவதற்கும், எழுதுவதற்கும் தேவையான ஆற்றலைத் தாமே பெற்றுக்கொள்ளுமாறு கற்பிப்பதுதான் நேர்வழி, நேர்மையான வழி.

“இதற்கு அன்று முதற் பரிசு பெற்ற மக்குப் பையனையே சான்றாகக் கூறலாம். ஒரு கிழமைக்குப் பிறகு, அந்தப் பையனை அழைத்து, அன்று பேசிய அந்தச் செய்தியைப்பற்றி அவனிடம் கேட்டபோது அவனுக்கு ஒன்றுமே நினைவில் இல்லை என்று சொல்லிவிட்டான். அவன் பேசிய போது நாங்கள் உடனிருந்து கேட்டதன் மூலம் எங்கள் நினைவிலிருந்த இரண்டொரு சொற்களைக் கூறி அவற்றின் பொருள் என்ன என்று கேட்டோம். அவ்வகைச் சொற்களையே 'அவன் கேள்விப்பட்டது கிடையாது என்று அடித்துக் கூறிவிட்டான்”.

“என்னவோ, அவன் படித்த படிப்பு அவனுக்குப் பரிசு வாங்கிக் கொடுக்கத்தான் உதவியிருக்கிறது” என்றேன் நான்.

ஆமாம், சொந்தப் புத்திக்காரனை மந்த மதிக்காரன் வெல்கிறான். நியாயத்தையும், நேர்மையையும் கடைப்பிடித்தொழுகும் நல்லவர்கள், எப்படியாவது வெற்றி கிட்டினால் போதுமென்று எண்ணி, எதையும் செய்யத் சித்தமாக இருக்கும் வல்லவர்களால் வெல்லப்படுகிறார்கள். இதுதான் இன்று வாழ்க்கையின் நடைமுறை; உலகின் நடைமுறையுங் கூட!

★

ஓரங்க நாடகம்:

கலிங்கத்துப்பரணி!

கோ. தமிழ்ச்செல்வன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

காட்சி 4

(கலிங்கப் போர்)

ஒலி:-

எம்மை இகழ்ந்தார்--எம் பொன்னாட்டை இகழ்ந்தாரெனத் தம்மில் மறங்கொண்டு கலிங்கத் தரை நோக்கிப் பாய்ந்தார் செம்மை நலங் கொண்ட செந்தமிழ வீரர், காட்டாற்று வெள்ளமெனக் கரையுடைத்துக் கனன்றெழுந்த சேனையுடன்—கடுஞ்சினத்து ஏறுகளார் களம்பாடும் தானையுடன்! சோற்றால் மடையடைக்கும் சோணாட்டின் வளவீரர், சேற்றால் அணைகட்டச் சீறியெழுந்த கலிங்கத்தைக் காற்றெனப் பாய்ந்து கடுகினர்; கூற்றெனப் பாய்ந்து வெற்றி கொண்டிடவே விரைந்தார். தாம் அட்டாலும் எதிரிகளைக் கட்டோடு அழிப்பதெனச் சபதம் பூண்ட இளவீரர் மூரிமலை முழைஞ்சில் வசிக்கின்ற சிங்கமெனச் சீறியெழுந்து முழங்கிப் புறப்பட்ட கலிங்கத்துப் போர் — விண்ணகம் திகைக்க; வீழ்ந்த வீரர்தம் இரத்தம் மண்ணகம் நிரைக்க மாவலி காட்டிய வீரமா காவியம்!

தொடங்குக போரை என்று தொடர்ந்த ஒலிவெள்ளம் கடல் வெள்ளம் நிகர்க்க,எழுந்தது சேனை, இகல்மேல் சென்று எய்திட, எதிரியர் தலைகளைக் கொய்திட!

தொடங்கியது போர்; அடங்கிய வீரர் ஆர்ப்பரித்தனர். தோள் தட்டினர்; வாள் இடையில் கட்டினர்; கவசம் அணிந்தனர்; கரங்களைப் புடைத்தனர்; களத்தெதிர் சென்றனர்.

கலிங்கமவை ஏழிலும் எழுந்ததொரு பேரொலி, கறங்குகடல் மலங்கியெழு பேரொலியெனத் திசைகளில் பரந்தது. தொடுகடல் குடித்த முகில்களின் இடிமுழக்கென வந்தன மதம்பொழி மலை வேழம். வளைந்தவாய் நுரை சிந்தக் கடலிடைச் சுருண்டு விழும் திரையென வருவன புரவி. விசைபெற விடுபரி இழுத்திடும் தேர்கள் கடல் மிசை செல்லும் கலங்களையொத்தன.

மூட்டற மரங்கள் முறிபட, எறிபட; அருவிகள் அனல்பட; அடவிகள் பொடிபட; தடமலை துகள்பட, நால்வகைச் சேனையும் நண்ணின போர்க்களம். பல்லியம் ஒலிப்ப. நற்பணிலங்கள் முரல' பொற்றேர் உருளைகள் பொடிபட உருண்டன; செற்ற குதிரைகள் சேனையில் திரண்டன.

கடலொடு கடல்பொரத் திரண்டதுபோல், அலையொடு அலைகள் எழுந்ததுபோல்; கனமலையொடு மலை முனைத்தபோல்; கடகரியொடு கரிகள்முனைத்தன. முகிலொடு முகிலினம் செறுத்தனபோல் தேரொடு தேர்கள் மோதத் திரண்டன. அரியிறொடு அரியினம்அடர்ப்பது போல் வீரர் அடர்ந்தனர் எங்கும்! விளைகனல் விழிகளில் முளைக்க; மினலொளி கனலென எறிக்க; வளைசிலை இடியென முழங்க; வடிகணை நெடுமழை படைக்க; குருதியின் நதி வெளிப்பரக்க; குடைகள் கடல்நுரையென மிதக்க; கரிகளின் உடலம் கரையென இருபுறம் இடக்க; மருப்பெதிர் மருப்புகள் பொருப்பென முட்ட; எழு நெருப்பொடு நெருப்பெதிர் சுடர்ப்பொறி தெறித்தெழ; நிகழ்கொடி கரிய, புகைக்கொடி புதுக்கொடியென அழறபட எழுந்தன விண்ணில்! இடத்திடை வலத்திடை எதிர்த்த கரிகளின் முகத்துக் கடத்தெழு மதத்திடைக் கோடுகள் ஒடிந்திட, யானைகள் ஓங்கின துதிக்கையை ஒச்சி!

இருதிரைப் பெருங்கடலென இருதிசையிலும் பொருதொழில் வேட்டு வந்து ஆர்த்துப் பொங்கினர் வீரர்.

புரவியிட்ட தேர் பூட்டப்பெற்றன; போர்க்களத்தினில் பொருதுடை பட்டன. காற்றினுங் கடிய வேகக் கலிமாக்களின் குழம்புக் கால்கள் பிழம்பெனத் தெறித்தன. வானிடைப் பிளந்து வளைத்தன பகைவர் நாணிடை எய்த கணைகள்! உயிர்ப்பலி கேட்டு உயர்ந்த கணைகள் எதிரியர் மார்பை ஊடுருவிச் சென்றன. ஆகாயத்திற் பறக்கின்ற அம்புக் கூட்டம் வீரர்களின் மாகாயத்து இரத்தத்தைச் சுவை பார்த்து விழ்ந்தன மண்ணிடை!

விற்கள் பறந்தன; வேல்கள் வெற்றிப் பண்பாடின; தோள்கள் துடித்துத்துவைத்த பகைவரை எதிர்த்த ஈட்டிகளைத் தாங்கின இருப்புக் கேடகங்கள்!

தம் மார்பில் தைத்த கணைகளைப் பறித்து எதிரிகள் மேல் இட்டனர் சிலர்; இருதொடையற்று விழுந்த மறவர் ஒருதொடையைச் சுழற்றி யெறிந்தனர்; மறுதொடையை விட்டு வைத்தனர் மற்றொரு களிற்றை வீழ்த்த! வேழத்தின் மீதிருந்து வெட்டுண்டு விழுகின்ற தலைகளும், விடாதே எதிரியை என்று வீரமுழக்கமிட்டன. பற்றிய வாளால் பறித்தனர் எதிரிகள் தலையை; பெற்ற வெற்றியால்

பேருலகதிரச் சிரித்தனர்; அற்ற தலைகளைக் கொண்டு சுற்றி வீசிப் பகைவரைச் சுழன்றெறிந்து கொன்றனர்!

வாள்கள் ஒடிந்தன; வரிவில்கள் முறிந்தன; வைரத் தோள்கள் இற்றன; சுடர் மழுச் சூலம் மழுங்கின; தாள்கள் அற்றுத் தரையில் வீழ்ந்தனர் வீரர்! தெறித்தன தலைகள்; செறி சுடர்க் கவசம் முறிபட்டது! இட்டிய எதிரிகளின் சிரங்களைத் தட்டினர்; கரங்களை வெட்டினர்; முட்டினர் எதிர்பொரு முன்னணி சேனையில்! குன்றுயர் தோளினர் சென்றெதிர்த்தனர்—பொன்றினர்—இரத்தப் பொய்கையில் விழுந்தனர்!

தேர்க் கால்கள் முறிபட்டன; திண்டிறல் யானைகள் வெட்டுண்டன; வீரரின் உடல்கள் வீழ்ந்து பார் நிறைந்தது; தலைகள் தடமலைகளாய் நெளிந்தன; குருதி அலைகடல் போல் பரந்தன; குடல்கள் குருதியின் மேல் மிதந்தன; கரிகளின் உடல்கள் விழுந்தன; கழுகுகள், நரிகள், காகம் உருண்டன; ஈட்டியின் முனையால் இருதயம் இழிந்தன பரிகள்!

வாளோட்டம் செலுத்தியதால் வயிறு இழிந்து விழுந்த வீரர் நாள்தோறும் பெருக; தூங்கிக் கிடந்த படைக்கருவிகள் துடித்தெழ, பாய்ந்த புலிக்கூட்டம் பகைவர்களின் இரத்தத்தில் தோய்ந்து பவனி வர; யுத்த களத்துப் பிணங்களின் இரத்த வெள்ளம் நாற்றிசையும் ஆறென ஓட; அற்றவுடல் நிலம் வீழ, அறுத்த உடல் துடித்திடும் இரத்த நிறக் களமதிலே, கொற்றமுடைத் தமிழ்ச்சேனை தம்மைச் சுற்றிவந்த கலிங்கத்தார் மனக்கோட்டையைச் சுட்டெரித்தனர் சுடர்வேல்களை அவர் நெஞ்சில் ஆழப் பாய்ச்சி!

கொழுந்துவிட்டெரிந்த கோபம் இதனால் விழுந்துபட்ட தலைகள் ஏராளம்! கண்ணின் கருமணிகள் இரத்த மண்ணில் தெறித்து விழுந்தன. சிந்தித் தரையில் பரந்தன எங்கும் சிதறிய மூளைச் சேறு! சினத்தால், கடித்துதிர்ந்த பற்கள் தரையில் பொடித்தயர்ந்து போயின! இடிக்குரல் முழக்கம் வெடித்திடப் பகைவர் பொடிப் பொடியாயினர்!

இமிழ்கடல் சூழ்ந்த இவ்வையம் கண்டிராது இதுபோல் போரென, தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானத்துப் புகழ் தமிழ் வீரர் தம் வீரம் குமிழ்விட்டு எழும்பிடவே, உடன், கொப்பளித்த கோரம்—கலிங்கத்தின் மலைச்சாரல் ஓரம்!

அண்டம் வெடித்ததென, ஆழ் கடல்கள் சூழ்ந்ததென, விண்ணின்று மீன்கள் வீழ்ந்து துடித்ததென, கொப்பளிக்கும் வெந்நீர்க் குளங்கள் உடைந்ததென, கட்டவிழ்த்த கடும்புலிகள் காட்டில் பாய்ந்ததென, கார் கொட்டும் கவின்மேகம் வெள்ளத்து நீர்கொட்டிப் பிரளயத்தை நிலவுலகில் சேர்த்ததென, சுழன்றடிக்கும் சூறைவளி சுற்றிப் பாய்ந்ததென, கயன்மீன்கள் துள்ளும் கடலலையின்மேல் இரத்தப் புயலலைகள் பொங்கி எழுந்து கரை மீறிய காட்சியெனப் பொங்குற்றுப் பாய்ந்த போர்வீரர் போர்க்களத்தில் பொன்றினர்! கோரச் சுடுகாடு கொண்டதுவோ ஏராளம்! வீரத் திருநாடு வென்றது — வெம்புலிக் கொடி நாடு வெற்றிமாலை சூடியது!

அஞ்சியோடி மலைக்குகையைத் தஞ்சமென அடைந்தான் அனந்தவர்மன். வெஞ்சினத்து வீரர் கலிங்கவேந்தனைப் பிடிக்க விரைந்தனர்; அழிந்தது கலிங்கம்; ஆர்ப்பரவம் அடங்கிற்று; ஒளிந்து மறைந்தெங்கோ ஓடினான் மன்னன்!

வேழம் ஆயிரமும் வெம்புரவி ஆயிரமும் தாழா நிதியறையின் தழல்மணிகள் ஆயிரமும் கவர்ந்து, யானைகள்மேல் இவர்ந்து, மீண்டனர் சோழர், தமிழகத்திற்கு! கடற்கலிங்கம் அழித்துக் களப் பரணி பாடி இரத்தச் சுடர்ப்படை வாள் குலோத்துங்கன் அடி சேர்த்து வணங்கி நின்றான் கருணாகரத்தொண்டைமான்!

(சோழநாட்டு அரண்மனை)

கருணா:- வெள்வேல் வேந்தே! வீழ்ந்தது கலிங்கம்; ஆழ்ந்தது இரத்தக் கடலுள்! அவர்களின் ஓகை உயர் மாடங்களில் கூகை அலற, வாகை சூடிவிட்டது தமிழகம்! கவிழ்ந்த கலமாகிவிட்டது கலிங்கத்தின் கீர்த்தி! வலிய குன்றரணம் வலிவிழந்தது, அவர்தம் கடலெல்லைகள் அவர்களைக் காக்கவில்லை; மலையெல்லைகள் மறைந்து கொள்ள மறுத்தன! தோற்றனர் பகைவர்! தங்கள் கட்டளைப்படி கலிங்கமெறிந்தேன்; மீண்டேன்; கழல் பணிகிறேன்.

குலோத்:- தன் கண்மூடித் தனத்தால் அழிவைத் தேடிக்கொண்டது—மாறா இழிவைத் தேடிக் கொண்டது!

கருணா:- வீரர்கள்தான், எனினும் வீழ்ந்தார்கள். தம் நாட்டிற்காகத் தன்னுயிரைப் பணயம் வைத்தனர் — தரைமட்டமாயினர்! மறவர்கள் மாண்டனர்; ஆனால் மன்னன் தோற்றோடி எங்கோயோ மறைந்துகொண்டான்; புலியெனச் சீறியெழுந்தவன் இறுதியில் எலியெனமாறி மலைக்குகையொன்றில் எங்கோ மறைந்தான். நாற்றிசையும் தேடி அவனைக் கண்டுபிடித்துக் கொணருமாறு வீரர்களை அனுப்பிவிட்டு இங்கு மீண்டேன்............

குலோத்:- கருணாகரரே, தமிழகத்தின் மானம் காத்தீர்—தென்னகத்தின் வீரத்தை வடபுலத்திற்கு வெளிப்படுத்தினீர்—அதன் மூலம் ஒரு வீரகாவியம் சமைத்தீர்—வெற்றிப்பரணி வகுத்தீர்! நாட்டுப்பற்றும் நல்லெண்ணமும் உடைய நல்வீர்! வாழ்த்துகிறேன் நும்மை! வரலாற்றிலே நும்புகழ் அழிக்க முடியாத பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

கருணா:- நன்றி மன்னா தங்கள் நல்லுரைகளுக்கு! கலிங்கப்போர், சோழர் வரலாற்றுக்கு ஒரு பொன்னேடாகத் திகழட்டும்! தமிழக வீரத்திற்கு ஒரு சான்றாய் விளங்கட்டும்!

கூட்டம்:- வாழ்க சோழநாடு! வாழ்க தமிழகம்! வெற்றிவீரர் கருணாகரர் வாழ்க! கொற்றக் குடை வேந்தர் குலோத்துங்க மாமன்னர் வாழ்க!

(வாழ்த்தொலி விண்ணிடை எழுகிறது)

காட்சி 5.

ஒலி:-

முடிந்தது கடும்போர் — முடிந்தது பலரின் வாழ்வு—விடிந்தது—கலிங்கம் விழுந்தது—புலிக்கொடி வெற்றியோடெழுந்தது! மடிந்தனர் பலர்; மாண்டனர் மறவர்; இடிந்தது கலிங்கம்; எங்கும் பிணக்காடு! இரத்த வெள்ளம்! அதில் மிதக்கும் வெட்டுண்ட கால்கள்—வீழ்ந்துபட்ட குறைக்கரங்கள்—அற்ற நரம்புகள்—முறிந்த எலும்புகள்—வெடித்த தலைகள்—புண்

களும் குருதியும் கலந்த கண்கள்—சிதறிய கண்ணின் கருவிழிகள்!

அழிந்த கலிங்கத்தின் சோகப் படலம் ஆரம்பமாயிற்று. மாட மாளிகைகள் மண் மேடாயின. அரண்மனைகள் அழிந்து ஒழிந்தன. நந்தவனங்கள் வெந்தெரிந்தன. சிங்காரப் பூஞ்சோலைகள் நெருப்புச் சிகைகளால் கரிந்தன. தண்ணிய பொழில்களுள் வெண்ணிய தீப்புகை சூழ்ந்தது! அழிவு கொஞ்ச நஞ்சமன்று!

கலிங்கம் சுடுகாடாய்க் காட்சியளித்தது!

நிணங்கள்—நிணமணங் கனிந்த நிலங்கள்; நிலம் முழுவதும் அடங்கிய பிணங்கள்—அருகே குருதிப் பேராறு! அற்ற தோள்கள் உதிர ஆற்றில் மிதந்தன; அறுத குடல்கள் குருதியில் மிதந்தன; இற்ற கால்களை இழுத்தன நரிகள்; வழுக்கிய சேற்றில் அடி வழுக்கி வீழ்ந்தன.

களமுழுதும் முடிவதைக் காணுதல் அரிது. கவிழ்ந்த மதக் கரி கொரிய குமிருவிட்டுக் குளம் முழுதும் நிறைந்ததெனக் குருதி வெள்ளம் கொண்டிருந்த களச் சாவு, மண்டியிருந்த இருட்காடு!

கரிகளின் உடல்கள் கரைகளாய் நிற்கப், பரிகளின் தோற்றம் பாலமாயிருந்தது. குருதி வெள்ளத்தில் குடைமிதத்தலால் குமிழிகள்எழும்பின! தாமரை பூத்த தடாகமொத்தது போர்க்களம்! அதில் மூழ்கிக் கமல மலரெனக் காட்சியளித்தன தேர்மொட்டுகள்! பசிய இலைபோல் பார்க்கத் தோன்றின பீலிக்குடைகள்!

நெருங்கியடர்ந்த பிணக்களத்தில் நிணச்சேற்றை மூடிக்கொண்ட கருங்காகம் வெண்காகமாகி நின்றது. உடலின்மேல் பல காயஞ் சொரிந்து பின்கால்கள் உடன் பதைப்ப உதிரத்தில் நீந்தும் யானைகள் கடலின்மேல் கலந்தொடரப் பின்னே செல்லும் கலம்போன்று தோன்றின. நெடுங்குதிரை சேணத்துடன் சரிந்து வீழ்ந்து நிணச்சேற்றில் கால்குளிக்க நின்ற தோற்றம் படுங்குருதிக் கடும்புனலை அடைக்கப் பாய்ந்த பாழிமரக் கூட்டத்தையொத்தன. விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகம் மலர்ந்த மேலோர் போல, பருந்துகளும் கழுகுகளும் தம் உடலை உண்ணப் பதும முகம் மலர்ந்திருந்தார் மடிந்த வீரர். சாகுமளவும் பிறர்க்குதவாதவரை விரும்பிச் சாருநர்போல், வீரர் உயிர் போமளவும் அவரருகே யிருந்து பின்னும் போகாத நரிக் கூட்டம் புறத்தே நின்றன. உடல் கொத்தித் தின்னவரும் பருந்துக் கூட்டம் அங்கு உடன் தைத்த ஆயுதத்தால் உயிர் துடித்தன. வருஞ்சேனை தஞ்சேனைமேல் வீழாவாறு காத்து அருங்களத்தில் உயிர் துறந்த படைத்தலைவர்கள் கருஞ்சேவகம் செய்து செஞ்சோற்றுக் கடன் கழித்தார். வாயினில் புகுந்த வேல்களைத் தாங்கி நிலத்தில் கிடந்தனர் சிலர். அவர் குருதி பருக வந்த கழுகுகள் வேல்களால் குத்துண்டு வீழ்ந்தன.

தம் பூமியின் நலனில் பற்றுக் கொண்ட வீரர்கள், நாட்டுக்காகத் தம்தலைகளைப் பலியிட்டனர்—தடமார்பில்ஈட்டிகளைத்தாங்கினர்!விலாவெலும்புகளில் வேல்கள் தாங்கினர். வெற்றி மாதாவின் தாகத்திற்குத் தங்கள் இரத்தத்தைக் குடிக்கக் கொடுத்தனர்—தங்கள் தசைகளைப் புசிக்கக் கொடுத்தனர்; கொழுப்புச் சேற்றைக் கொலு மண்டபங்களாக்கினர். சிரங்களை அடுக்கிச் சிம்மாசனம் ஏற்படுத்தினர்—மண்டையோடுகளை உடைத்துப் பொற்கலமாக்கினர்—அதில் இரத்த நீரை இட்டு நிரப்பினர். எலும்புகளால் வெற்றிக்கு ஏணி வகுத்தனர்—இரத்த ஆற்றுப் பாசனத்தைத் தம் நாடு செழிக்க வழங்கினர்,

தலைமகனை இழந்த தாய்மார்கள்! கணவனைப் பறிகொடுத்த கற்புடை மகளிர்! பிணக்காட்டில் தங்கள் தலைவர்களின் உடலைத் தேடும் காட்சியினைக் கண்டான் அனந்தவர்மன். அளவிலாச் சோகங்கொண்டான். பேயடித்த நிலையானான்; முகம் வெளிறிப் பேசாமல் பார்த்திருந்தான்; பின்னர் பெருமூச்சு எழும்பியது.........

(இருளில் — போர்க்களத்தில் — கலிங்கத்தின் அழிவு கண்ட அனந்தவர்மன் புலம்பல்)

அனந்த:- ஐயோ, என் நாடே! என் நாட்டு மக்காள்! பொன்னூட்டுப் புதல்வர்காள்! வீணே அழிந்தது கலிங்கம்—வீணன் ஓடினேன் தோற்று! விழுப்புண் பட்டு இறந்திலேன் — இழுக்கினைச் சுமந்து வாழ்கிறேன்—கலிங்கத்தின் அழுக்கினைப் போக்க வகையறியேன். அந்தோ! சொர்ணபூமியை — சொர்க்க நாட்டைச் சுடுகாடாக்கினேன். எனக்காக மடிந்த சேனை வீரர்களே! தானை மறவர்களே! படைத் தலைவர்களே! எனதருமை அமைச்சர் கலிங்கராயரே! நீங்களெல்லாம் என்னை மன்னிப்பீர்களா? அந்தோ, பகை மண்டலம் பாழாக்கிற்றே கலிங்கத்தை; தீப்புகை மண்டலம் சூழ்ந்து விட்டதே என் நாட்டில்! என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? எங்ஙனம் இழந்த நாடு எய்துவேன்? கடலென்னைவிழுங்காதோ? காற்றெனைச் சூறை கொள்ளாதோ? வானம் இடிந்து வீழாதோ? மேகம் என்னை மூடிப் புதைக்காதோ? நெருப்பென்னை எரிக்காதோ? நிலம் பிளந்து நடுங்காதோ? ஐயகோ, தீவினையாளன் நான்; கெடுத்தேன் கலிங்கத்தை — தடுத்தேதன் அமைச்சர் முதலானோர் அறிவுரையை! செவி மடுத்தேனில்லை அவைகளை. அதன் பயன், வேதனை வெதும்ப, துயரத்தால் வெந்து மடிகிறேன். நொந்து மாள்கிறேன்.

(மயங்கிக் கீழே சாய்கிறான்)

(திரை விழுகிறது)

காட்சி 6

(கலிங்கத்துப் பரணி அரங்கேற்றம்)

[சோழநாட்டு அரண்மனை—அரசவை-பலரும் குழுமியிருத்தல் — புலவர்கள் எதிர்ப்புறம் இருத்தல்—அரசரையடுத்து ஜெயங்கொண்டார் இருத்தல். புலவர்கள் நூலின் தன்மைகுறித்துப் பேசல்]

புலவர் 1:- மணிமுடி வேந்தே, பணிவு பல. இக் கவிதையின் அணிநயம் வியந்தோம்; அனையன கண்டோம்; அரங்கேற்ற விழைந்தோம்.

புலவர் 2:- சொற்சிறப்பும் பொருட்சிறப்பும் பொதிந்து காணப்படுகிறது இக் காவியம்!

புலவர் 3:- பரணிக்கோர் ஜெயங்கொண்டார் என்பதிலே யாதொன்றும் ஐயம் இல்லை.

புலவர் 4:- உவமை நயங்கள் புதுமை முறையில் அமைந்துள்

ளன. நூலினை நுவன்ற செம்மை சால் புலவர் கவிமன்னரேயாவர்!

புலவர் 5:- கலிங்கத்துப்பரணி நம் நாட்டிற்கே ஓர் அரிய கருவூலம்!

புலவர் 6:- தமிழுலகின் பெரும் பயனே இத்தலைசான்ற புலவரின் தோற்றம்!

புலவர் 7:- குற்றங் குறைகள் எத்துணையும் இல்லை; நற்றமிழின் பொருளறை இந்த நல்லேடு!

புலவர் 8:- வீரத்தின் விளைநிலம், இது!

புலவர் 9:- சோழர் புகழின்சொர்ண மாளிகை!

புலவர் 10:- அரங்கேற்றியருள்கः அகங்குளிர்ந்தோம்; வரவேற்றோம்; அரசே, நின் வெற்றியுடன் வாழிய இந்நூல்!

[மன்னன் எழுகை]

குலோத்:- புலவர் பெருமக்களே! அறிவுடை அமைச்சர்களே! ஆன்ற பேரவையோரே! கற்று வல்லார் பேச்சின் நயம் முற்றும் தமிழ் நயமே! புலவரின் கூட்டம் மலர்வனத் தோட்டம்! புலவர்களின் பொன்னுரைகள் கேட்டேன்; என்னுரையும் இயம்புவேன். கலிங்கத்துப் பரணியினைக் கனியொத்த தமிழ் மொழியில் கரும்பொத்துக் கவி பாடிய பெரும்புலவர் ஜெயங்கொண்டாருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தை வழங்குகிறேன்.

[கைதட்டல் ஒலி. வாழிய கவிச் சக்கரவர்த்தி என்ற முழக்கம்.]

ஜெயங்:- இருக்கைவிட்டெழுந்து ஏட்டுச் சுவடியை மன்னன் கையில் அளிக்கிறார். அதனை மன்னன் அன்புடன் வாங்கி, அரங்கேற்று பீடத்தின்மேல் வைக்கிறான். புலவர் அமர்கிறார். அனைவரும் மகிழ்தல் — வாழ்த்தொலி.)

குலோத்:- (பேச்சு) அவைக்குழுவினரே! ஆன்ற பெரியோரே! கலிங்கத்துப்பரணி அரங்கேற்றத்திற்கு வந்தருளிச் சிறப்பித்த செந்தமிழப் பெருமக்காள்! எந்தன் நன்றி முதலில் உரித்தாகுக!

படைவலியால் கலிங்கத்தைப் படுகளத்தில் போராடி வென்று பரணி சமைத்தார் கருணாகரர்; அதனால் பெருமை பெற்றது சோழ மண்டலம்! தமிழ் அருமை பெற்றது கலிங்கத்துப் பரணியால்! அழிந்த கலிங்கப்போரை அழியாத காவியமாக்கிவிட்டார் ஜெயங்கொண்டார்! என்றும் நின்று நிலவு தென்றமிழ்ப்பரணி வென்றதை நினைக்கவீரகாவியம் சமைத்துவிட்டார்! இந்நூல், விசைமொடிந்த உடலுக்கும் வலிமையூட்டும் — பசையற்ற மனத்திற்கும் பசுந்தேன் ஊட்டும்! தமிழகத்தின் எழுச்சிக்குத் தனியேடு இது! தென்னகத்தின் வீரத்திற்குப் பொன்னெழுத்து இது! எதிர்காலத் தமிழகத்திற்கு எழுச்சியூட்ட உதவட்டும் இது! தமிழர் தாழ்ந்தாலும், தம்நிலையறிந்து மீண்டும் தலை நிமிர உதவட்டும் இந்நூல்!

வாழ்க கலிங்கத்துப்பரணி!

(திரை விழுகிறது.]

★

முயல்வாரா அமைச்சர்?

—(அட்சயன்)—

"சக்கிலியபட்டி என்றிருப்பதா? கூடாது. சாதியின் பெயரால் ஒரு ஊரின் பெயர் இருக்கலாமா? தகாது. இழிதன்மை இன்னும் இந்த நாட்டிலே சிரஞ்சீவித்தனம் பெற்று வாழ்ந்து வருகிறதென்றல்லவா பொருள்படும். ஆகவே சாதியின் கீழ்மையைச் சுட்டாமல் சுட்டிக்காட்டுகின்ற, சக்கிலியபட்டி என்பதனைக் காந்திபுரம் என மாற்றிவிடுகிறேன்'' என்பதாக, அண்மையில் திண்டுக்கல் வட்டாரத்தில் பயணத்தை மேற்கொண்ட மராமத்து அமைச்சர் திரு. கக்கன் அவர்கள், சிறுமலைக்கு அருகிலுள்ள சிற்றூர் ஒன்றின் வருகையின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

சக்கிலியபட்டி என்ற சாதிக் குறிப்பால் அவ்வூர் அழைக்கப்பட்டதை அவரது தூய உள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லைப் போலும்! கீழ்மை நிலையை எடுத்துக்காட்டும் தன்மையிலே அவ்வூர் வழங்கியிருத்தலை அவர் மனம் சகித்துக் கொள்ள இயலாததாகிவிட்டது போலும்! ஆகவே அப்பெயரினை உடனே மாற்றிக் காந்திபுரம் என்ற பெயரைச் சூட்டிவிட்டார்.

சக்கிலியபட்டி காந்திபுரமாக்கப்பட்டது — மந்திரியின் மகத்தான சாதனை என்பதாக பத்திரிகைகள் பிரமாதமாக வெளியிட்டுத் தங்களது சேவா மனப்பான்மையைக் காட்டிக்கொண்டன.

அமைச்சரது நல்லெண்ணத்தால் கவரப்பட்ட துணிச்சலை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

சக்கிலியபட்டியை காந்திபுரம் என மாற்றி அமைத்துவிட்ட ஒரே செயல் காரணமாக, நாட்டிலே அழியாது, என்றும் நித்திய ஜீவனை விளங்கிடும் தீண்டாமையை, சாதியத்தை, மதத்துவேஷத்தை முற்றிலும் களைந்துவிட முடியும் என்பதாக் அமைச்சரே எண்ணியிருக்கமாட்டார்.

சக்கிலியபட்டி, காந்திபுரமாக மாற்றப்பட்டதாலேயே, சக்கிலியர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்நிலை எய்துவிடுவார்கள், இத்தகைய மாற்றங்கள் இழிநிலையில் அவதியுறும் மக்களது சமுதாய இன்னல்கள் களைய வழிகோல உதவும் என்பதாகவும் அமைச்சர் எண்ணியிருக்கமுடியாது.

சக்கிலியபட்டி என்றிருப்பது இழிநிலையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஆகவே இப்பெயரை மாற்றுதல் இழிதன்மையை மறைக்க, அழிக்க வகை கோலுவதாகவாவது அமையுமல்லவா என்பதாக எண்ணியே,

அமைச்சர் காந்திபுரம் எனப் பெயரிட்டார்.

எக்காரணம் கற்பித்து, அமைச்சர் சக்கிலியபட்டி பெயரை மாற்றினரோ, அதைவிட அழுத்தம் திருத்தமாக, ஆதார பூர்வமாக, பஞ்சாயத்துச் சட்டரீதியாக, நாம், டால்மியாபுரம் என்பதைக் கல்லக்குடியாக மாற்றும்படி கேட்டோம்.

கல்லக்குடிப் போராட்டம் ஒன்றே போதும், நமது "கலி எல்லாம்" தீர்த்துவிடும். தென்னகத்தின் வளர்ச்சியின் அத்தனை குறிக்கோள்களும், கல்லக்குடி போராட்டத்தில் அடங்கியவைதான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய முழக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையிலேதான் கல்லக்குடிப் போராட்டம் அமைந்திருக்கிறது. வடநாடு தென்னாடு பேதம் மறைய, வடநாட்டின் ஆதிபத்தியப் பிடிப்பிலிருந்து தென்னாடு விடுதலைபெற, கல்லக்குடிப் போராட்டம் ஒன்றே போதும் என்பதாக நாம் கருதினோமில்லை.

கல்லக்குடி என்பதாக ஏற்கனவே ஒரு ஊர் இருக்கையில், அதன் ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட இடத்திலே மாற்றுப் பெயரால் ஒரு ஊரா? வீண் வேலை தானே என்பதும் அல்ல; இப்போராட்டத்தின் உட்கருத்து. நமதுநாடு நமதாக வேண்டுமென்ற இலட்சியத்தின் ஒரு பகுதியே இப்போராட்டம்.

காந்திகிராமம் என்றிருப்பதை அனுமதிக்கின்றோம், பெருந்தன்மையுடன். சுபாஷ் சந்திரபோஸின் பெயரால் அழைக்கப்படும் தெருக்களின் பெயர் மாற்றத்தைக் கண்ணியத்தின் பெயரால் ஒத்துக்கொள்ளுகிறோம். நேருவின் பெயரால், படேலின் பெயரால், அமைக்கப்படும் நகரங்கள், தெருக்கள், பூங்காக்கள் அத்தனையையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தவறவில்லை.

காரணம்?

அவர்கள் இந்திய தேசிய விடுதலைப்போர்ப் பரணியிலே மிக்க ஈடுபாடுகொண்டவர்கள். ஒரு நாட்டின் அடிமைத்தனம் அகல முழுமூச்சுடன தொண்டாற்றியவர்கள். மக்களது தொண்டர்களாக வாழ்ந்துள்ளார்கள். மக்களது நன்மை தீமைகளில் பங்கேற்றுப் பணிபுரிந்திருக்கிறார்கள். வாழ்நாளில் பெரும்பகுதி சிறையிலேயே கழித்திருக்கின்றனர். மக்கள் உள்ளத்தில் நிரந்தர இடம் பெற்றவர்கள்.

மனிதப் பண்புக்கு மாறாக இல்லாத காரணத்தால் இதனை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்.

ஆனால், இந்த டால்மியா யார்?

காந்தியாரா? நேரு பண்டிதரா? படேலா? போஸா? தாகூரா?

வ. உ. சி. யின் பெயரால் ஒரு ஊர் அமைக்கட்டும்—நாம் வரவேற்கிறோம்.

திருப்பூர்க் குமரன் பெயரால் ஒரு நகரம் அமைக்கட்டும்—நாம் வரவேற்கிறோம்.

வள்ளியம்மையாரின் பெயரால் ஏழை மக்களின் வாழ்வளிக்கும் ஒரு—பெரும் தொழிற்சாலை அமைக்கட்டும்—நாம் மனமாரப் பாராட்டி வரவேற்கிறோம்.

திரு. வி. க. வின் பெயரால் பாரதியாரின் பெயரால்—இன்னும் உள்ள நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயரால்—அவர்களது நினைவுக் குறியாக எதை வேண்டுமானாலும் அமைக்கட்டும்—நாம் தலைவணங்கி வரவேற்கிறோம்.

ஆனால், நாட்டு நலனிலும் மக்கள் நலனிலும் நாட்டமில்லாத நாணயமற்றவன் பெயரால் ஒரு ஊர் அழைக்கப்படுவதென்றால், அது எவ்வளவு இழிதன்மை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அரசியல் தியாகியா? மக்கள் தொண்டனா? அறிவுலக மேதையா? சிந்தனையாளனா? பெருங்கவியா? சிற்பியா?

இல்லை.

தொழிலாள ஏழை மக்களின் வியர்வைத் தடாகத்திலே சுக போகமாக நீச்சலடிக்கின்ற பெரும் பணமுதலை. மாபெரும் சுரண்டல் பேர்வழி. ஆலை அதிபன். கொள்ளையடித்துக் குவித்த குபேரன்.

இத்தகைய பணக்காரனின் பெயரால் தென்னகத்தில் ஒரு ஊரை அமைத்து அழைப்பதா?

எத்தகைய தன்மையது தென்னகம்?

கங்கையை வென்றான். கடாரத்தை வென்றான். இமயத்திலே கொடி பறக்கவிட்டான் என்பதாக வீர வரலாறுகள் தமிழ்ப்பரணி பாடிக்காட்டும் தென்னக மண்ணிலே, எந்நாட்டவனுக்கும் தலை வணங்காது வீர மக்களாய்த் தலை நிமிர்ந்து வாழ்ந்த தரணியிலே, வடநாட்டுக் கொள்ளைலாபமடிக்கும் குபேரன் பெயரால் ஒரு ஊர் அழைக்கப்படுவதா எனக் கேட்டோம்.

டால்மியாபுரம் கல்லக்குடியாக்கப்படவேண்டும் எனக் கேட்டோம்.

சக்கிலியபட்டியைக் காந்திபுரம் என மாற்றிய அமைச்சரது மூல விக்கிரகங்கள் தந்த பரிசு என்ன?

துப்பாக்கிக் குண்டுகள்! தோழர்கள் பிணமாயினர். கால்களை இழந்தனர், கைகளை இழந்தனர், கண்களைப் பறிகொடுத்தனர், தோழர்கள் சிந்திய குருதி செந்நிறக் காடாக்கி நின்றது கல்லக்குடியிலே.

இத்தகைய துப்பாக்கித் துரைத்தனம் நடத்தி, நமது தூய தொண்டினை, நல்ல செயலை நசுக்கிட முனைந்த காங்கிரஸ் பெரியவர்கள் தான், இழிநிலையில் உள்ள தன்மையில் ஊர்பெயர் இருக்கலாகாது எனக்கூறிப் பெயரை மாற்றி அமைக்க முன்வந்திருக்கிறார்கள். இழிதன்மையைச் சுட்டும் குறிப்புச் சொல்லால் இயங்கலாமா இவ்வூர் என முழக்கமிட்டு, மாற்றியிருக்கிறார் ஒருநொடியில், காந்திபுரம் என்பதாக.

ஆனால் இழிதன்மையின் நிலைக்களனாக, பங்குமார்க்கெட்டிலே மோசடி செய்தவன் பெயரில் அதோ டால்மியாபுரம் நித்திய ஜீவன் பெற்று வாழ்ந்து வருகின்றது.

இதோ சக்கிலியபட்டி, காந்திபுரமாகி மாறி நிற்கிறது.

டால்மியாபுரம் கல்லக்குடியாக மாறாது! ஆனால், சக்கிலியபட்டி காந்திபுரமாக மாறுகிறது!! கல்லக்குடி இழிதன்மையைப் போக்காதாம்! காந்திபுரம்தான் போக்குமாம்! அமைச்சர் அவர்களின் பெயர் மாற்றச் செயல் இதைத் தானே காட்டுகிறது. இழிதன்மை எங்கே இருந்தாலும் எந்த வடிவத்தில் இருந்தாலும், அதை மாற்றவேண்டுமென்ற கொள்கையுடையவர்கள் நாம். எனவே, சக்கிலிய பட்டியைக் காந்திபுரமாக மாற்றிய அமைச்சர் இழிதன்மை மட்டுமல்ல, கேவலமான செயல்புரியும் ஒருவரின் பெயரால் ஒரு ஊர் அழைக்கப்படுவதை இனியாவது மாற்ற முயல்வாரா? முனைவாரா?

★

"பாதிரி"யார்

கோவி. கார்முகிலன்

உலகம் இயற்கையின் இருளில் மூழ்கிக்கிடந்தது, அலை கடலின் பேரிரைச்சல் அமைதியைக் கிழித்துக்கொண்டிருந்தது.

டிங் டாங், டிங் டாங்.

மாதா கோவிலின் மணியோசை ஐந்தாறு முறை ஒலித்துவிட்டுத் தன் கடமையைச் செய்துவிட்ட வெற்றிக் களிப்பில் அமைதிபூண்டு நிலையில் நின்றுவிட்டது.

எங்கும் அமைதி,

ஏழை சூசையின் பிணத்தினுக்கு அஞ்சலி செய்தார் பாதிரி; கூடியிருந்த மக்கள் கண்ணீரோடு விடைதந்தனர்.

சூசையின் பிணம் இடுகாட்டிற்குச் சென்றுகொண்டிருந்தது.

காலமெலாம், தன்னுடலை உலகின் கோரப்பிடிகளுக்கு இரையாக்கி—அதன்பயனைப் கிடைத்த ஊதியத்தால் தாயற்ற தன் நொண்டி மகளைக் காப்பாற்றிய சூசை இன்று அவளைத் தனி மரமாய்—சிறகற்ற பறவையாய், நாதியற்று வீதியில் கிடக்க, அவன் அமைதியோடு போய்க்கொண்டிருக்கிறான்.

அலை ஓய்ந்துவிட்டது, மரம்பட்டுவிட்டது, வாழ்வு சாக்காட்டை முத்தமிடச் சென்றுகொண்டிருக்கிறது.

காலவெள்ளம் இன்னும், எத்தனை ஏழைகளின் வாழ்வைச் சூறையாடக் காத்து நிற்கிறதோ? அடிக்கொருமுறை அப்பா, அப்பா என்று ஆசையோடு அழைத்த அவ்வின் குமுதவாய், இன்று பாசத்தோடு கதறுகிறது.

திக்கற்ற ஏழைக்கு ஏன் தான் இயற்கை இத்தனை அழகை அள்ளி இறைக்கவேண்டும்? பிறவியிலேயே காலற்ற அவளுக்கு உலகம் கண்டு வியக்கும் அழகு ஏன்? நஞ்சிலே மாணிக்கத்தையும், சேற்றிலே செந்தாமரையையும் படைத்தது போல், இயற்கை சூதும்வாதும் சூழ்ந்த வஞ்சக உலகில் மேரியையும் படைத்துவிட்டதோ!

இடுகாட்டிற்குச் சென்றவர்கள் திரும்பிவிட்டார்கள், மேரி தன் மரக்கால்களை மண்ணில் ஊன்றியபடி விண்ணினை வெறித்துப் பார்த்து நடந்தாள்.

எங்கே செல்லுவாள்? அப்பா! என்று இனியாரை அழைப்பாள். "உனக்கு என்ன குறை கண்ணே" என்று யார் ஆறுதல் சொல்லுவார்கள்.

சிறு குழந்தையல்ல மேரி; சித்தாடைகட்டிச் சிக்கிநடந்து மண்ணில் விளையாடும் பருவமல்ல அவளுக்கு. பூத்துக் காய்த்து எழில் குலுங்கி நிற்கும் பருவ மங்கையவள்! பார்ப்பவர்கள் நெஞ்சில் 'ஆசை நஞ்சை' ஊற்றும் அழகின் வடிவமவள்! முத்தையும் இரத்தினத்தையும் அவள் சிரிப்புக்கு அச்சாரமாகத் தருவது, இமயத்திற்குச் சாதாரண குன்றை ஒப்பிடுவதுபோலாகும்.

அழகிற்கு அழகு அவள், ஆடற்கலையின் அழகரசி மாதவி, அவள் அழகிற்கு இணையாகாள். போர்க்களத்திலே ஓலமிடும் பிணங்களைச் சுவைபார்த்த அம்பைவிடக் கூரான விழிகள், முழுமதியின்முகம், முனிவன் மகள் சகுந்தலையோ என ஐயுறும் அழகு, அந்த அழகு உலகை வெறுத்துச் சென்றுகொண்டிருந்தது, மரக்கால்கள் தாமரைபோன்ற அவளுடைய கைகளில் வேதனை தந்துகொண்டிருந்தன.

இன்றுதான் அதன் துன்பத்தை உணர்ந்தாள். இளமை முதல் தன்னுடன் பிறவாமல் பிறந்த மரக்கால்கள் அவள் நெஞ்சத்தைக் கனக்கச் செய்தன.

மேரியின் கண்கள் கண்ணீரை வற்றாத ஊற்றாக பெருக்கிக்கொண்டிருந்தன, "எப்படியப்பா வாழ்வேன்! ஏன் என்னை இத்தனை நாள்வாழவைத்தீர்கள்? அணைந்துபோன விளக்கின்திரியை ஏன் தூண்டி எரியவைத்தீர்கள். அதனால் யாருக்குப்பயன்? காலிழந்த என்னை, இத்தனைபாடுபட்டு ஏன் வளர்த்தீர்கள், பிறந்தபோதே கொன்றிருக்கக் கூடாதா?" என்று கதறி அழுதாள்.

அழுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும் அவளால்? ஏழையாயிற்றே! காலற்ற நொண்டியாயிற்றே! என்று யார் அவளுக்கு உதவிசெய்வார்கள்.

நாட்கள் நகர்ந்தன.

அவள் வீட்டைவிட்டு எங்கும் நகரவில்லை. அவள் தந்தை சேர்த்துவைத்திருந்த பணத்தைக் கொண்டு, பலவேளைகள் பசியோடு இருந்து காலத்தை விரட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தோனி! அவள் அத்தை மகன், சூசை, பலமுறை மேரியை

மணக்கச்சொல்லிக் கெஞ்சியும் அவள் காலற்ற நிலையை எள்ளி நகையாடி மணக்க மறுத்துவிட்டவன்; இன்று அவள் வீடுதேடிச் சென்ருன்.

வேதனையிலே வெந்து சாகின்ற அவளுக்கு வாழ்வளிக்கப்போக வில்லை. 'கூண்டுக் கிளியை முத்த மிடப்போகிருன். திக்கற்ற அவளுக்கு உற்றதுணை யார் இருக்கிருர்கள்?

"மகளே! உலகம் ஏழையை வஞ்சகக் கண்ணேடுதான் பார்க்கும்" என்று சொன்ன அவளின் தந்தையா இருக்கிருர்?

உலகம் இருளில் மூழ்கிக்கிடந்தது, விண்ணேடு உறவாட நிலவரசன் தன் மாளிகையை விட்டு மேல் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். உலகே அமைதியில் மூழ்கிக் கிடந்தது. மேரி அமைதியின்றித் தவித்துக்கொண்டிருந்தாள்.

மேரி...மேரி......

அவளின் அமைதியைக் குலைத்தது அந்தக் குரல். கள்ளமற்ற அந்த அபலை கதவைத்திறந்தாள். வெளியே தன் அத்தை மகன் அந்தோனி நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள்.

கள்ளமற்ற மேரி பசுவையும் புலியையும் ஒன்ருக எண்ணிவிட்டாள்.

"வாருங்கள் அத்தான்! என்ன திடீரென இந்த நேரத்தில் வந்துவிட்டீர்கள்" என்று அன்போடு கேட்டாள்.

அந்தோனி பேசவில்லை. உள்ளே சென்றதும் கதவை மூடிஞன்.

"கதவைத்திறவுங்கள்"...அவள் தொண்டை கனத்தது, நெஞ்சினின்றும் வார்த்தைகள் எழவில்லை.

கதவு திறக்கப்படவில்லை, தாழ்ப்பாள் போடப்பட்டது.

அவள் கதறினுள், "வேண்டாம் அத்தான்; உலகின் கோரப்பிடியில் என்னைச் சிக்கவைத்துச் சீரழித்துவிடாதீர்கள்" என்று கெஞ்சினுள்.

அந்தோனியின் முரட்டுக் கரங்கள் மேரியின் பொன்னுடலைத் தாவிப்பிடித்தன. மேரி துள்ளித் துவண்டாள், அவன் கால்களைப் பிடித்துக்கெஞ்சினுள்.

"என்னை மணந்து வாழ்வளிக்கத்தான் மறுத்துவிட்டீர்கள், நான் மரம்போன்று வாழ்கிறேன்; என் வாழ்வை பொசுக்கிவிடாதே! காலற்ற நொண்டி, கற்பைக் காப்பாற்றிக்கொள்ள என்ஞல் தப்பிச் செல்ல முடியாது, உன்னை வாழ்வளிக்கச் சொல்லவில்லை, சாவை அளித்துவிடாதே! என்றுதான் சொல்லுகிறேன்.

இரும்புமனம் கொண்ட அந்தோனி அவள் கதறலையும் கண்ணீரையும் இன்பமாக எண்ணினுன். "உலகே தடுத்தாலும் நான் என் ஆசையை அழித்துக்கொள்ள மாட்டேன்மேரி" என்று முரட்டுத்தனமாக அவளை வளைத்துப் பிடித்தான்.

சந்தனம் சாக்கடைமணம் வீசியது, எச்சில்பட்ட கனியாகிவிட்டாள் மேரி, எழுந்துபோகச் சக்தியற்றுப் பிணமாகக் கிடந்தாள்.

கண்கள்சுழன்றுகொண்டிருந்தன. காலம் அவளுக்கு இந்தக் கொடுமைமிகும் தண்டனையை அளிக்குமென்று அவள் எண்ணவே இல்லை!

அழகு மலரைச் சூடிக்கொள்ளத்தான் யாரும் விரும்பவில்லை. அதைக் கசக்கி ஏன் வீதியில்எறிய வேண்டும்?

அவளின் பிஞ்சுஉள்ளம் வெந்து சாம்பலாயிற்று. உலகம் அவள்கண்ணுக்கு அந்தோனியாகவே தெரிந்தது.

அடிபட்ட மான்போல் அவள் நடந்தாள், கண்களில் கண்ணீரில்லை, மனதில் வெறுப்பு இல்லை.

மேரி சிரித்தாள்! அவள் சிரிப்பில் இன்பமில்லை, துன்பம்தான் கலந்து கிடந்தது, போர்களத்திற்குப் பற்றற்றுச் செல்லும் போர் வீரனைப்போல் சாக்காட்டிற்கு வெற்றிநடைபோட்டாள்.

அவள் மரக்கால்கள் அவளுக்குத் துன்பத்தைத் தரவில்லை "இத்தனை நாள் என்னைச் சுமந்திருந்தாய், இன்று உனக்கு விடுதலை அளிக்கிறேன்" என்று அவைகளை முத்தமிட்டாள்.

அருகிலிருந்த கடல் அவளை 'வா மகளே வா' என்று அழைத்தது, "பொல்லாத உலகம் அம்மா, உன்னைப்போன்ற நல்லவர்கள், என்னிடத்தில் எத்தனையோ பேர் இருக்கிருர்கள், நீயும் வந்துவிடு" என்று அழைப்பதைப்போன்றிருந்தது அதன் அலைகளின் ஓசை.

உலகின்மீதுள்ள வெறுப்பை ஆத்திரமாக்கி மரக்கட்டைகளை மண்ணில் ஊன்றிக் காட்டிக்கொண்டாள்.

வழியிலே இருந்த புனித ஏசுவின் ஆலயம் அவளை நிற்கவைத்தது, உணர்ச்சியற்றுக் கண்ணீரோடு நின்ருள்.

"பிறர்க்காகத் தன்னுயிரைப்பணயம் வைத்த புனித ஏசுவே! உலகில் என்னைப்போன்ற ஏழைகள் ஏன் பிறக்கிருர்கள்?"

அவளையும் அறியாமல் வாய்விட்டே கதறிவிட்டாள் "உலகே எனக்காக அந்தோனியை மன்னித்துவிடு" என்று கண்ணீர்விட்டாள். யாரோ கோவிலுள்ளே இருந்துவருவதைப் போன்றிருந்தது. மேரி வேகமாக நடந்தாள்.

பரந்த உலகில் வாழவழியற்ற பெண்களின் தாய் வீடுபோன்ற கடல், தன் அலைக் கரங்களை நீட்டிற்று.

இறக்குமுன் அவளுக்குத் தன் தந்தையின் நினைவுவந்தது.

"அப்பா, நானும் பட்டுடுத்தி என் கணவரோடு என்ருே ஓர்நாள் மஞ்சம் நோக்கி நடப்பேன் என்று எத்தனை நாள் எண்ணியிருப்பீர்கள். அத்தனையும் இங்கே அடைந்துவிடுவேன்" என்று தாவிக்குதித்தாள்.

மேரி!......உணர்ச்சி பொங்க அழைத்தது ஒருகுரல், திரும்பிப் பார்க்க முடியவில்லை அவளால், அவளுடனேயே கடலில் குதித்துக் கரைசேர்த்தது அந்த உருவம்.

கண்விழித்துப் பார்த்தாள் 'ஆ! நீங்களா' என்று அதிர்ந்து போனுள்.

இளமையும் துணிவும்கொண்ட பாதிரியார், மேரியின் எதிரில் நின்றுகொண்டிருந்தார். அவர் எண்ணங்கள் எங்கோ சென்றன.

"மேரி! வாழ்வை இழந்துவிடுதல் மிக, மிகச் சாதாரணந்தான். ஆனல் திருப்பிப் பெறமுடியவில்லை" என்ருர் பாதியார்.

மேரிக்கு அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது. எதைச் சொல்லுவாள் அவள், நொண்டி மகளுக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்து வாழச்செய்துவிட்டுச் சென்ருரே தன் தந்தை, அதைச் சொல்லுவாளா? பிறவி முதல் இன்றுவரை ஏன் பிறந்தோம் என்று எண்ணுகிருளே அதையா?

சுதந்திரப்பறவையாகத் திரிந்ததன் சிறகைவெட்டி உலகத்தின் வசைக் கூண்டிற்குள் தள்ளிவிட்ட அந்தோனியைப்பற்றி சொல்லுவாளா?

கண்ணீரோடு தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தாள் மேரி, பாதிரியாரின் கைகள் அன்புடன் அவள் பிஞ்சுக் கைகளைப்பற்றின. "உன் வாழ்வில் என்ன குறை ஏற்பட்டது, அதை மனம்விட்டு என்னிடம் சொன்னால், என்னால் இயன்றஅளவு குறைகளைத்தீர்த்து வைக்கிறேன்" என்று பாதிரியார் உறுதி கூறினர்.

மேரி பேசாமல் சிலைபோன்று நின்றிருந்தாள்.

"மேரி உலகில் எல்லோரும் வாழத்தான் பிறந்தார்கள்; சாவதற்குப் பிறக்கவில்லை, எத்தனை துன்பம் உன் வாழ்வில் சூழ்ந்தாலும் நீ சாவதற்குத்துணிந்திருக்கக் கூடாது. இது கோழைத்தனம்." பாதிரியாரின் இந்த வார்த்தைகள் மேரியின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. ஆசை தன் வாழ்வைப் பாழ்படுத்தியதை—தான் அனலில் வீழ்ந்த புழுவாக நெளிவதை மனம்விட்டுச் சொன்னாள்.

பாதிரியாரின் கண்கள் கலங்கின' "சூசைக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன், மேரி. அவனை மன்னித்துவிடு" என்று நா தழுதழுக்கச் சொன்னார்.

நான் மன்னிக்கிறேன். உலகம் என்னை மன்னிக்குமா? பறிபோன என் கற்பைத் திருப்பிப்பெற முடியுமா? சேற்றிலே பிறந்த செந்தாமரை சேற்றுக்குத்தான் சொந்தமா? அந்தச் சேற்றிலே கசக்கி எறிவதுதான் மனிதத்தன்மையா?" சொல்லுங்கள் என்று கதறினாள்.

மாதா கோவிலின் மணியோசை முழங்கியது. மணி நான்கு என்பதைக் காட்டிற்று, பாதிரியார், மேரியை அழைத்துக்கொண்டு ஆலயம் நோக்கிச் சென்றார். மக்கள் அமைதியிலே மூழ்கிக்கிடந்தனர். உள்ளே நுழைந்த பாதிரியாரின் கண்கள் அந்தோனியைத் தேடின.

அந்தோனி அங்கு இல்லை. அந்தப் பெண்மையை அழித்தவன் அங்கு வரவில்லை. அந்தோனியை அழைத்துவரும்படி பாதிரியார் கட்டளை இட்டார். போனவன் ஆளில்லை என்ற செய்தியோடு திரும்பி வந்தான்.

அவரின் எண்ணங்கள் சுழன்றன. ஒரு அபலையை வாழவைக்கத் தன்னால் முடியவில்லையே என்று தன் மனத்தைக் குழப்பிக்கொண்டார். தொழுகைக்கு வந்தவர்களைப் பார்த்தார் — அவர்களைக் கேட்டார். "என் மக்களே! புனித ஏசுவின் பெயரால் கேட்கிறேன். அழகான ஒரு இளம் பெண்— கால்களற்றவள் — திக்கற்றவள். அவளை யாராவது மணந்து வாழ்வளிக்க முன் வருவீர்களா?"

எங்கும் அமைதி, யாரும் 'நான் உள்ளேன்' என்று வரவில்லை.

மீண்டும் அதையே திருப்பிக் கேட்டார், பயனில்லை.

பாதிரியின் உள்ளம் வெந்தது. ஒரு பெண்ணினைக் காப்பாற்ற உங்களில் ஒருவருக்கும் துணிவில்லையா? ஏழையாகப் பிறந்த அபலைப் பெண்கள் சாகத்தான் வேண்டுமா? புனித ஏசு 'தன் சுகமே, பிறர் சுகம்' என்று சொன்னாரே, அதை எங்கே பறக்கவிட்டீர்கள்? உங்களில் ஒருவருக்குப் பிறக்கும் குழந்தை கால்களற்ற நிலையில் இருந்தால் அதைக் கொன்று குப்பை மேட்டிலா எறிவீர்கள்?

மக்களே! உங்களால் முடியாததை நான் செய்கிறேன். உலகம் என்னைத் தூற்றட்டும் நீங்களும் என்னைத் தூற்றுங்கள். ஏசுவின் எண்ணத்தை நான் செயலாக்குகிறேன். இதில் தவறு என்ன? வஞ்சகர்கள் கூட்டம் உலவும்வரை வாழ்விழக்கும் பெண்கள் தொகை பெருகிக்கொண்டுதான் இருக்கும். என்னைப் போன்றவர்கள் முடிந்தவரை தடுக்கத்தான் வேண்டும்.

பாதிரியாரின் வார்த்தைகள் முடிவுபெறவில்லை. மக்கள் கூச்சலிட்டனர். "ஏசு உங்களை மன்னிக்க மாட்டார். கர்த்தர் உங்களைப் பாபியாகச் சபித்துவிடுவார், நீங்கள் நாத்திகராக மாறிவிட்டீர்கள்.

பாதிரியார் எதையும் கேட்கவில்லை. தான் அணிந்திருந்த நீண்ட மேல் அங்கியையும், செபமாலையையும் கழட்டி அங்கிருந்த மேடை மீது வைத்தார்.

"மேரி!......" பாதிரியார் அன்பு தழைக்க அழைத்தார். மேரி வந்தாள்—நின்றாள். மக்கள் அவளை விழுங்கிவிடுவதுபோல் வெறுப்புடன் பார்த்தார்கள்.

மக்களே! வாழ்விழந்த ஒரு அபலையை வாழவைக்க நான் துணிவது, குற்றமென்றால் நாத்திகனென்றால், அந்தக்குற்றங்கள் பெருகட்டும். நாத்திகர்கள் வளரட்டும்.

மேரியின் கைகள் பாதிரியாரின் தோளில் இருந்தன. "மேரி இன்று முதல் நீ என் மனைவி" என்று பாதிரியார் சொன்னார்.

அவள் காதுகளை அவளே நம்பவில்லை. உலகில் இப்படியும் ஒருவரா? என்று வியந்து போனாள்.

"நான் உங்கள் பாதிரியல்ல, இன்று முதல் உங்களில் நானும் ஒருவன். நானும் ஆண்மகன்தான். நீங்கள் கூறுவதுபோல் நான் தெய்வப்பிறவியல்ல, நான் வருகிறேன்" என்று விடைபெற்று ஆலயம் விட்டு வெளியே நடந்தார் மேரியோடு. ★

இனிக்கும் செய்தி

வாசக அன்பர்களும், விற்பனையாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்—

"தம்பிக்கு, அண்ணன்"

எழுதுவது, சித்திரைத் திங்களில் இருந்து தொடங்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
'திராவிட நாடு'

ஆயுத நிராகரிப்பும் கூட்டுச் சக்திகளும்

ஆயுத நிராகரிப்பு அல்லது ஆயுதக் குறைப்பு என்ற பிரச்சினை ஐ. நா. சபையின் பொதுச் சபையால் கடந்த பதினான்கு ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதுவல்லாமல் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் பல்வேறு நாடுகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் 660-க்கும் மேற்பட்ட ஆயுதக்குறைப்பு மாநாடுகள், கூட்டங்கள், சந்திப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றன. இந்த இரண்டும் நீங்கலாக, பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகள் மட்டும் தனித்து இதுவரை 180-மாநாடுகள் கூட்டி அணு ஆயுதங்கள்பற்றி விவாதித்திருக்கின்றன. இந்த மூன்று நாடுகளின் 181-வது மாநாடு சில நாட்களுக்கு முன்புகூட நடந்துகொண்டிருந்தது. மேற்கண்டவைகள் மூன்றிலும் சேராமல், "எல்லாநாடுகளும் முழுமையான, நீடித்த ஆயுத நிராகரிப்புச் செய்யவேண்டும்!" என்ற சோவியத் நாட்டின் திட்டத்தைப் பிரதமர் குருஷ்சேவ் சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் ஐ. நா. சபையின் பொதுக் கூட்டத்தில் உணர்ச்சியோடு அறிவித்தார். அதற்குப் பின்னர் அமெரிக்காவின் ஐசனேவர் ஆயுத நிராகரிப்பைப்பற்றிப் பேசினர். ஜெர்மனியின் அடினர் ஆயுத நிராகரிப்பைப்பற்றிப் பேசினர்.

ஆனல் இத்துணை பேச்சுக்களுக்கும் பின்னர் நிறைவேறியிருக்கும் செயல் என்ன?

ஐ. நாவில் முழுமையான ஆயுத நிராகரிப்புக்கு வேண்டுகோள் விடுத்த பிரதமர் குருஷ்சேவ், தான் இரஷ்யாவின் படைக்குறைப்புச் செய்தியை அறிவிக்கும்போது "...இருந்தாலும், அணு, நீர்வளிக் குண்டுகள் இன்னும் இரஷ்யாவில் உற்பத்திசெய்யப்பட்டுத்தான் வருகின்றன" என்ற செய்தியையும் கலந்து தந்தார். குருஷ்சேவைப் பின்பற்றி ஆயுத நிராகரிப்பைப் பற்றி பேசும் ஐசனேவரும் சமீபத்தில்தான் ஜப்பானுடன் ஆயுத தளவாடங்களை உதவும் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் தெரிவித்து, பிரதமர் கிஷியுடன் கைகுலுக்கினர். "உங்களோடு நானும் சம்மதம் தெரிவிக்கிறேன்" என்று ஒப்புக்குக் கூறிவிட்டு பிரான்சின் டிகாலே சென்ற பிப்ரவரியில் தனது முதல் அணுகுண்டுசோதனையைவெற்றிப் பெருமிதத்தோடு செய்துமுடித்தார். இன்னும், எந்தவகையில்

அன்பு

ஆயுத நிராகரிப்பு அல்லது ஆயுதக் குறைப்புச்செய்துகொள்வது என்ற ஒரு முடிவுக்கே அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, மற்றும் அதன் துணை நாடுகள் வரவில்லை என்பதைத்தான் சில கிழமைகளுக்கு முன் ஜெனிவாவில் கூடிக் கலைந்தமாநாடும், இந்தத் திங்களுக்குள்ளாகத் திரும்பவும் ஜெனிவாவிலேயே கூட இருக்கும் மற்றொரு மாநாடும் தெரிவிக்கின்றன. இதற்கு மேலாக, போர்முறைகளையும் ஆயுதங்களையும் எந்த எந்த வகையில் தந்திரமாகவும் பெரிய அளவிலும் கையாளவேண்டும் என்ற பிரச்சினையைச் சமீபத்தில் நேட்டோ நாடுகள் ஆலோசித்தன: எந்த முறையில், அல்லது அளவில் ஆயுத நிராகரிப்பு அல்லது குறைப்புச் செய்துகொள்ளவேண்டும் என்ற ஒருமித்த முடிவிலேயே பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்கும் வேறுபாடு எண்ணங்கள் இன்னும் நிலவி வருகின்றன.

ஆக, இரு உலகப் போர்களின் விளைவுகளை இன்று படிப்பினையாகக்கொண்ட பெரும் நாடுகளும் ஏதும் இல்லை; தலைவர்களும் ஒருவருமில்லை.

இரண்டாவது உலகப்போர் முடிந்த அன்றிலிருந்து இன்றுவரை, ஒரு உலகப் பெரும்போர்தான் மூளவில்லையே தவிர, அதற்கான ஒரு சூழ்நிலை என்றும் எங்கும் இல்லாத வகையில், சமீபகாலமாகத்தான் அதிக அளவில் நிலவி வருகிறது. இதை ஆயுதமின்மையால் ஆயுத நிராகரிப்புச் செய்த நாடுகளும் ஆயுதங்கள் இருப்பதால் நிராகரிப்புச் செய்ய முடியாத நாடுகளும் நன்கு உணர்ந்துதான் இருக்கின்றன? என்றுமில்லாத அளவுக்குப் போர்களின் விளைவுகளை மனிதர்களும் தலைவர்களும் இன்றுதான் முழு அளவுக்கு உணர்ந்திருக்கிருர்கள்.

குருஷ்சேவ் அமெரிக்காவுக்குச் சென்றாலும், ஐசனேவர் இரஷ்யாவுக்குச் சென்றாலும், டிகால், மாக்மில்லனைச் சந்தித்தாலும் இன்று இருதரப்பினரும் வெளிப்படையாகப் பேசிக்கொள்வது — பேசமுடியும் ஒரே பிரச்சினை ஆயுத நிராகரிப்பு என்ற ஒன்றுதான். வேறு எதைப்பற்றியும் அவர்கள் இன்றிருக்கும் நிலையில் பேச நினைத்தாலும், முடியாது. பேச முயலுவார்களானல் இருக்கும் குழப்பங்கள் பெருங் குழப்பங்களாகத்தான் முடியும். புகழ்பெற்ற அரசியல் விமர்சகர் வால்டர்லிப்மன் கூறுவதுபோல, அதனல்தான் மேற்கூறிய தலைவர்கள் எல்லோரும் தங்களால் பேச மட்டுமே முடிந்த ஆயுதக் குறைப்பைப்பற்றி பேச

கிறார்கள். "ஆயுத நிராகரிப்பா?" "ஆயுதக் குறைப்பா?" என்று, அந்தச் சொற்களின் பொருள் ஆழத்தைக்கொண்டு மட்டுமே பிரச்சினையின் முடிவை ஒத்திப்போட்டு வருகின்றனர். ஆனால் உலகப் பெரும் தலைவர்கள் யாருக்கும், ஆயுத உற்பத்தியில் முன்னின்று போர்க் கொடி பிடித்து வெற்றி வாகை சூடித் தங்கள் நாட்டை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் கிடையாது. தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் ஆயுத நிராகரிப்பு வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்தான்.

ஆனால் இந்த எண்ணத்தை முழு அளவில் செயல்படுத்திக் காட்டுவதுதான் இன்று அவர்களாலேயே இயலாத காரியமாயிருக்கிறது. வால்டர் காப்டன் என்னும் அமெரிக்க எழுத்தாளரே மற்றொரு இடத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் ஆயுத நிராகரிப்புப் பிரச்சினையில் உலகப் பெரும் தலைவர்களெல்லாம் முன்னும் செல்லமுடியாமல் பின்னும் செல்லமுடியாமல் விழிக்கிறார்கள்; அந்த அளவுக்குப் "பாதைக்குழப்ப"மிருக்கிறது என்கிறார் அவர். இதன் காரணமாகத்தான் பிரச்சினையின் முடிவு கானல் நீர்போல் தோன்றித் தோன்றி மறைந்து வருகிறது.

இரண்டாவது உலகப் போரிலிருந்து இன்றுவரை ஆயுதக் குறைப்போ அல்லது நிராகரிப்போ வேண்டும் என்று பேசப்பட்டும், இரண்டில் எதுவுமே முழு அளவில் எந்த நாட்டிலும் நிகழவில்லை என்பதைத்தான் எல்லா வல்லரசுகளின் தலைவர்களும் உணர்கிறார்களேயன்றி, இரண்டையும் மேற்கொள்ள முடியாததற்குக் காரணம் என்ன என்பதை வெளிப்படையாக யாரும் விவாதித்ததோ, ஒப்புக்கொண்டதோ கிடையாது. ஆனால் ஒவ்வொருவரது உள் மனமும் இதற்கான "காரணம்" என்ன என்பதை நன்கு அறியும். இந்தக் காரணத்திற்கு ஒரு முடிவு கண்டு, அதற்குப்பின் உலக அமைதியைப் பற்றி பேசாத வரையில், எந்த ஒரு வல்லரசுத் தலைவராலும் உலகம் எதிர்பார்ப்பது போன்ற ஒரு ஆயுத நிராகரிப்பைச் செய்து காட்டமுடியாது.

"கூட்டுச் சக்தி" என்ற ஒரு அமைப்பு முறையும், அதன் பிறப்பான "தளைகளோடு கூடிய அந்நிய உதவி" என்ற ஒரு வழக்கும், இயற்கையாகவும் செயற்கையாகவும் உலக நாடுகளின் அரசியலில் தோன்றிவிட்டது. சுருங்கக் கூறினால், இவையிரண்டின் விளைவுகள்தான் இன்று உலக மேடையில் தோன்றிக் காலக்கணக்காக நீண்டுவரும் மாபெரும் குழப்பங்களெல்லாம்.

உலக அரசியலில், நாடுகளிடையே கூட்டு அமைப்பு முறை தேவை; அதுதான் அந்நிய உறவுகளையும பழக்க வழக்கங்களையும் பெருக்கிக்கொள்ள உதவும் சாதனம் என்று கூறுவோருமுண்டு. நாடுகள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து நின்றுகொண்டு, ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தை வாழ்வின் நிரந்தரமான எதிரியாகப் பாவித்துத் தீங்குகளை விளைவித்து இயங்கிவருவதுதான் கூட்டுச் சக்திகளின் கொள்கையும் நடப்பும் என்றால், உலகம் அம்முறையினால் அமைதியோடு இயங்கி வரும் என்று எப்படி உறுதி கூறமுடியும்? இன்று உலக அரசியலில் கூட்டுச் சக்திகள் இயங்கி வருவது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை ஒரு சக்தி அமைப்பு மற்றொன்றை எதிரியாகப் பாவித்துக் குழப்பங்களை உண்டாக்கி வருவது. இதன் பலனாக ஏற்பட்டதுதான் இன்று எல்லோர் நாவிலும் அடிபட்டு வரும் போர் எண்ணம் என்ற சொல். இரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ், சென்ற ஆண்டு ஐ. நா. சபையின் பொதுக்கூட்டத்தில் பேசும்போதுகூட "உலக நாடுகளிடையே "போர் எண்ணம்" நீங்காது இருந்துகொண்டே வருகிறது. இது என்று மறைகிறதோ அன்றுதான் உலக அமைதி நிரந்தரமாகத் தோன்றும்" என்று பல இடங்களில் குறிப்பிட்டுப் பேசினார்.

பறக்கும் ஆப்ரேஷன் அறை

விண்ணிலே பறக்கும் விமானத்திலேயே அவசரமான சத்திர சிகிச்சைகள் செய்து முடிக்கும் பொருட்டு, மாஸ்கோ சத்திர சிகிச்சைக் கருவி ஆராய்ச்சிக் கழகம் "பறக்கும் ஆப்ரேஷன் அறை" ஒன்றை தயார் செய்துள்ளது. இதைக்கொண்டு வைத்திய ஹெலிகாப்டர் விமானத்தின் அறையிலே இனி இரண சிகிச்சை ஆப்ரேஷன் செய்யமுடியும். ஹெலிகாப்டர் விமானம் மலைகள், காடுகள் என்று பாராது எந்தப் பிரதேசத்திலும் இறங்கக் கூடியதாகையால், இனி எவ்விடத்துக்கும் சென்று அவசர சத்திர சிகிச்சை தேவைப்படுவோருக்கு காலதாமதமின்றி உடனே சிகிச்சை செய்திடலாம். இவ்வறையில் விஷேச முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிகிச்சை மேஜை ஒன்றும் உணர்ச்சியை அகற்றுவதற்கான சாதனங்களும், இரத்தம் கொடுப்பதற்கான ஏற்பாடும், சத்திர சிகிச்சைக் கருவிகள் மேஜை ஒன்றும் பொறுத்தப்பட்டிருக்கும்.

இந்த முதலாவது "பறக்கும் ஆப்ரேஷன் அறை" கிராஸ்னொயார்க் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுச் சக்தி முறையால் உலக அரசியலில் அவ்வப்போது பெருங் குழப்பங்கள் தோன்றிக் கலவரத்தைக் கொடுத்தற்குச் சான்றுகள் நிறைய இருக்கிறதே தவிர, இந்த அமைப்பு முறையால் உலக அமைதி இந்த இந்த நேரங்களில் காப்பாற்றப்பட்டது என்ற ஒரு பட்டியலை யாராலும் காட்டமுடியாது. "நான்கும் மூன்றும் எட்டு" என்று கூட்டு அமைப்பு முறையில் உள்ள ஒரு நாடு கூறினால், அதில் அங்கம் வகித்து வருவதன் நன்றி உணர்ச்சியைக் காட்டிக் கொள்வதற்காக மற்றுமுள்ள எல்லா நாடுகளும் "ஆமாம் எட்டுத்தான்" என்று கூறுமே தவிர 'யோசனை செய்து பார்த்துக் கூறுகிறேன்' என்றுகூடக் கூறாது. இதுதான் இன்று கூட்டு அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடம் உள்ள 'தோழமை' உணர்ச்சியும் "நன்றி" உணர்ச்சியும். இந்த இரு உணர்ச்சிகளாலும் அந்தக் கூட்டு அமைப்பினுள் உள்ள நாடுகளுக்கு நன்மைகளோடு கூடிய சாதகங்களும், அந்தக் கூட்டு அமைப்பு முறைக்கு அப்பாற்பட்ட நாடுகளுக்கு மாபெரும் கேடுகளும்தான் விளைந்து வருகின்றன. இந்த அடிப்படையில் தோன்றுவதுதான் உலக நாடுகளிடையே இருக்கும் "போர் எண்ணங்களும்," "குழப்ப உணர்ச்சிகளும்".

நியாயம் எகிப்தின் பக்கம் இருந்தும் பிரான்சும், பிரிட்டனும், அமெரிக்காவும் "கூட்டுணர்ச்சி"யோடு சூயஸ் பிரச்சினையைப் பெரிதுபடுத்தி ஒரு போரையே உண்டாக்க இருந்ததும், எழுதாத ஒப்பந்தத்தைப் புறக்கணித்து முதல் அணுகுண்டுச் சோதனையைச் செய்து முடித்த பிரான்சின் டிகாலைப் பார்த்து ஒரு சுடு சொல்கூடச் சொல்லாமல் அமெரிக்கா மௌனம் சாதித்ததும் இந்தக் "கூட்டுச் சக்தி" என்ற ஒரு அமைப்பு முறையின் விளைவுதான்.

"கூட்டுச் சக்தி" என்ற அமைப்பின் உடன்பிறப்புத்தான் "தளைகளோடு கூடிய அந்நிய உதவி" இந்த முறையில், வசதியுள்ள நாடு மற்றொரு வசதியில்லாத நாட்டுக்கு, மக்களின்

வயிற்றை நிரப்பக்கூடிய உணவை அளிப்பதைக் காட்டிலும், அவர்கள் இரு கைகளிலும் துப்பாக்கிகளையும் அணுகுண்டுகளையும் கொடுப்பதில்தான் அதிக கவனம் செலுத்தும். ஒரு நாடு அழிய வேண்டுமென்று எண்ணினால் அதற்கருகிலுள்ள மற்றொரு நாட்டை அதன் விரோதியாக்கி நடுவில் புகுந்துகொண்டு இராணுவ உதவிகளை அளித்து தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத்தான் இத்திட்டம் மிகப் பெரிதும் பயன்படுகிறது. இதற்காகத்தான் பாதுகாப்பு உடன்படிக்கை என்ற பெயரில் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதும், 'அந்நிய உதவி' என்ற பெயரில் நிகழும் இம் முறைகள்தான் போர் எண்ணத்தை நாடுகளிடையே உடனடியாகத் தோற்றுவிக்கவல்லன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நீங்காத குழப்பங்கள் இருந்து வருவதற்கும், பாகிஸ்தானில், அனுமதியில்லாத ஆப்கானிஸ்தான விமானங்கள் பறப்பதும், ஜப்பான் இராணுவ பாதுகாப்பு ஒப்பந்தத்தை இழக்க விரும்பாமல் புதுப்பித்துக்கொண்டிருப்பதும், மத்திய கிழக்கு எல்லைச் சிக்கல்களில் இஸ்ரேல் சிரியாவின் எல்லையை ஆக்ரமிப்பதும், இரஷ்ய, செக்கோஸ்லேவேகிய இராணுவ தளவாடங்களை இஸ்ரேல் உபயோகிப்பதாக நம்பப்படுவதும் மேற்கூறிய 'அந்நிய உதவி' முறையினால் நிகழ்ந்து வரும் விளைவுகள்தான்.

கூட்டுச் சக்தி அமைப்பும், தளைகளோடு கூடிய அந்நிய உறவு முறைகளும்தான் இன்று எந்த ஒரு வல்லரசையும், ஆயுத நிராகரிப்பைப் பற்றி ஒரு முடிவான எண்ணத்திற்கும் வருவதினின்றும் தடுத்து நிறுத்துகின்றன. இந்த இரண்டு முறைகளையும் உலக அமைதிக்காகப் பயன்படுத்தும் வரையில் ஆயுத நிராகரிப்பு என்பது உலக வல்லரசுகளால் முடியாத ஒரு செயலாகத்தான் இருக்கப் போகிறது.

இந்த ஒரு அமைப்புமுறை மட்டும் இல்லையென்றால், சென்ற ஆண்டு, செப்டம்பர் திங்கள் 27-ல் ஐசனோவரும், குருஷ்சேவும் ஏற்படுத்திக்கொண்ட கேம்ப் டேவிட் சந்திப்பிலாவது ஆயுத நிராகரிப்புப் பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கும். அதற்குப் பின்னரும் கூட இரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் இப்போது சோவியத் யூனியனைப் பொறுத்தவரையில் ஒரு வரையறுத்த ஆயுத நிராகரிப்புத் திட்டத்தை வைத்திருந்தும்கூட, ஐசனோவரும், மாக்மில்லனும், டிகாலும், தனித் தனியாகவோ, அல்லது பொதுப் படையிலோ ஒரு முடிவெடுத்த திட்டத்தைத் தருவதில் கூடிக் கூடி கலந்து வருகின்றனர்.

இன்று எந்த ஒரு வல்லரசுத் தலைவரும் பூரண ஆயுத நிராகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் விரைவின்மை காட்டுவதற்குக் காரணம், அது கூட்டுச் சக்தி அமைப்பு முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதோடல்லாமல், தளைகளோடு கூடிய அந்நிய உதவி மற்றும் உறவு முறைகளுக்கு ஒரு காலனாக வந்துவிடுமே என்ற அச்சம்தான். முழு அளவில் என்று ஆயுத நிராகரிப்பு நடக்கிறதோ, அன்றே ஒரு வல்லரசு மற்றொரு நாட்டில் இராணுவ தளவாடங்கள் கட்டும் நிலைக்கு ஒரு முடிவு வந்துவிடும். போர் விமானங்களும், கப்பல்களும் துறைமுகங்களும், விமான நிலையங்களும் ஒருவல்லரசு மற்றொரு நாட்டில் ஏற்படுத்த முடியாமல்போய்விடும். இதன்பலனாகக் கூட்டுச் சக்தி அமைப்பு முறையையே கலைக்க நேரிடும். ஆனால் இதெல்லாம் நிகழ்ந்துவிடக் கூடாதே என்பதற்குத்தான் இன்று ஆயுத நிராகரிப்புப் பிரச்சினையில் தயக்கமும் தாமதமும் காட்டப்பட்டு வருகிறது.

தத்துவ அறிஞர் பெட்ரண்ட் ரசல் கூறியிருப்பதுபோல, ஆயுதஉற்பத்திப் போட்டியில் முன்னணியில் நிற்பதை இன்று எந்த வல்லரசும் ஒரு பெருமையாகவும் உயர்வாகவும் கருதி வருகிறது. இங்கிலாந்தின் முன்னாள், தொழிற்கட்சி அமைச்சர் அட்லி பிரான்சுக்கு உதாரணமாகக் காட்டியிருப்பதுபோல், அழகு சாதனங்களை வெளியே செல்லும் ஒரு பெண் எவ்வளவு முக்கியமானவைகளாகக் கருதுகிறாளோ, அதுபோலச் சில வல்லரசுகள் அணு ஆயுதங்களைத் தங்கள் நாட்டின் அழகுக்கு அழகு கூட்டும் அழகு சாதனங்களாகக் கருதிவருகின்றன! கூட்டுச் சக்தி அமைப்பு முறையையும், அதன் உடன் தோன்றலான தளைகளையுடைய அந்நிய உறவு, உதவி முறைகளையும் வல்லரசுகள் தங்கள் பெருமைக்கும், உயர்வுக்கும் பெருமை தருபவைகளாக மதித்துக் காப்பாற்றி வருகின்றன.

கம்போடியப் பிரதமர் நார்டம், யுகோஸ்லேவியப் பத்திரிகை (Review of International Affairs) ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் விளக்கியுள்ளவாறு, என்று போர் எண்ணத்தை விளைவிக்கக்கூடிய கூட்டுச் சக்தி முறை அடியோடு அகற்றப்படுகிறதோ, என்று தளைகளையுடைய அந்நிய உறவு, உதவி முறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறதோ, அதன் பின்புதான் உலகில் நிரந்தரமான, உண்மையான அமைதி தோன்றும்; அதன் பின்னர்தான் 'பூரண ஆயுதக் குறைப்பு' என்ற கொள்கையையும் எந்த ஒரு வல்லரசும் கைக்கொள்ள முடியும். இந்த இரண்டும் முதலில் நிறைவேறுகிற வரையில் ஜெனிவாவில் எத்தனை முறைகள்தான் கூடிக்கூடிக் கலந்தபோதிலும் பயனேதும் விளையப்போவதில்லை. ஆயுத நிராகரிப்பு, கானல் நீராக, சொல்லில் மட்டும்தான் தோன்றித் தோன்றி மறையப்போகிறது.

நீருக்கு அடியில் இயங்கும் ஆராய்ச்சிக்கூடம்

கடலுக்கு அடியில் 750-மீட்டர் ஆழத்துக்கு ஆராய்ச்சியாளர்களை எடுத்துச் செல்லக்கூடிய மாபெரும் மூழ்குக் கோளம் ஒன்று லெனின் கிராடில் தயாராகி வருகிறது.

முற்றிலும் உலோகத்தாலான இந்தக் கோளம் 25-டன் நீருக்குச் சமமான பரிமாணமும் பெற்றுள்ளது. பல்வேறு பார்வைக் கருவிகளும் புகைப்படச் சலனப்பட காமிராக்களும் இதனுள் பொருத்தப்பட்டிருக்கும். எதிர்பாராத வகையில் ஏதேனும் அபாயம் நேரிட்டால், கோளத்தினுள்ள ஆராய்ச்சியாளர் ஒரு சிறு பிடியைச் சுற்றினால் போதும், உடனே கோளம் மேலே உயர்ந்து நீர் மட்டத்துக்கு வந்துவிடும்.

இந்த மூழ்குக் கோளம் மிகவும் நம்பகமானது என்பது சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இது கட்டி முடிக்கப்பெற்று சோவியத் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

பதிவு என். எம். 4642 தொலைபேசி எண். ...

உறுதி வென்றது

—[தொ. மு. அன்புச்செழியன்]—

பார்லிமெண்டுக்குத் தேர்தல் நடைபெற்று — தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் சபையின் துவக்கத்தில் கிருஸ்தவ மதத்தின் வேத நூலான 'பைபிளை'க் கையிலேந்திக்கொண்டு உறுதிமொழி வழங்கிய பிறகுதான் அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்து பார்லிமெண்டின் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்பது அந்த நாட்டின் வழக்கம்!

ஒருமுறை பார்லிமெண்டுக்கு தேர்தல் நடைபெற்று முடிவும் தெரியப்படுத்தியாகிவிட்டது! தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குறிப்பிட்ட நாளில் சபைக்கு வந்து வழக்கப்படி 'பைபிளை'க் கையிலேந்திக்கொண்டு உறுதிமொழி வழங்கிய பிறகு தங்களுக்குரிய இடங்களில் அமரலானார்கள்! ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் "என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்திருக்கும் என் தொகுதி மக்களின் நன்மைக்காக இந்தச் சபையில் பாடுபடுவேன்" என்று உறுதிமொழி வழங்கினார்! "நீங்கள் கூறிய உறுதிமொழி செல்லாது; இச்சபையின் வழக்கப்படிதான் நீங்கள் உறுதிமொழி வழங்கவேண்டும். இல்லையென்றால், உங்கள் தொகுதிக்குத் தேர்தல் நடைபெறவில்லையென்று கருதி வேறு தேர்தல் நடத்தவேண்டி வரும்" என்று அதிகாரி விளக்கினார்!

என்றாலும் அந்த உறுப்பினர் "முறையாக என் தொகுதி மக்களின் அதிகமான வாக்குகளால் நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு வந்திருப்பதால் இச் சபையின் உறுப்பினராக இருக்கத் தகுதி வாய்ந்தவன்" என்று சபையில் வாதாடினார்!

பார்லிமெண்டார் அதை ஏற்றுக்கொள்ளாமல் அந்த உறுப்பினர் தொகுதிக்கு மறுபடியும் தேர்தல் நடத்தினார்கள்! இந்தத்தேர்தலிலும் அந்த உறுப்பினர்கலந்துகொண்டு போட்டியிட்டார்! இந்த முறையும் அவரே அந்தத் தொகுதியின் உறுப்பினராகப்பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்! பார்லிமெண்டில் மீண்டும் உறுதிமொழி வழங்கும் கட்டத்தில், சென்ற முறையைப் போலவே உறுதிமொழி வழங்கினார்!

பார்லிமெண்டார் மூன்றாவது முறையும் அந்த தொகுதிக்கு தேர்தல் நடத்தினர்!

மூன்றாவது முறையும் அந்தத் தொகுதியின் உறுப்பினராக அந்த உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பட்டார்! குறிபிட்ட நாளில் தன் தொகுதி வாக்காளர் அனைவரும் பின் தொடர பெரும் ஆரவாரத்துடன் பார்லிமெண்டுக்கு வருகை தந்தார்! அப்போது முதன் மந்திரியாக இருந்த "க்ளாஸ்டனுக்கு" நிலமையை எப்படிச் சமாளிப்பது என்பது பெரும் பிரச்சினையாகிவிட்டது! கடைசியாகப் பார்லிமெண்டை அவமதித்த குற்றத்தை அந்த உறுப்பினர் மேல் சுமத்தி அவரைச் சிறையில் அடைத்துவிட்டார்!

அவ்வளவுதான்! மக்கள் பொங்கியெழுந்து கிளர்ச்சி நடத்த ஆரம்பித்துவிட்டார்கள்! இதைப் போன்ற ஒரு நிகழ்ச்சியை நினைத்தும் பார்க்காத பார்லிமெண்டார் சிறையில் அடைக்கப்பட்ட அந்த உறுப்பினரை அடைத்துவைத்த முப்பத்தாறு மணி நேரத்திற்குள்ளாகவே விடுதலை செய்துவிட்டனர்!

அதுமட்டுமா? வழக்கம் கெட்டுப் போகக்கூடாது என்று பிடிவாதமாக இருந்து வந்த பார்லிமெண்டார் தங்களுடைய வழக்கத்தைக் கைவிட்டுவிட்டு இதற்கு முன்பு அந்த உறுப்பினர் எந்த முறையில் உறுதிமொழி வழங்கினாரோ, அந்த முறையையே ஏற்றுக்கொள்ளவும் வளைந்து கொடுத்தனர்.

மும்முறை படையெடுத்து இங்கிலாந்து நாட்டின் பார்லிமெண்டைத் தன் விருப்பத்திற்கு இணங்க வைத்த வீரன் யார்?

"எந்த நாட்டினராலும் அவர்களுடைய ஆட்சி, அவர்களுடையதாகவே இருக்கவேண்டும்" என்ற சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதை எண்ணங்களும் கொண்ட பெஸ்ண்ட் அம்மையாரின் நல்ல நண்பராக விளங்கிவந்த சார்லஸ்ப்ராட்லா என்ற இங்கிலாந்து நாட்டுக்காரர்தான். வளர்ந்து வாழ்க அவரது உறுதி!

★

சோவியத் கிராமிய பள்ளிக்கூட சீர்திருத்தம்

ஏழாண்டுத் திட்டத்தின் முதல் வருடத்தில் திட்டம் நிறைவேற்றப்பட்டதின் விளைவுகளைப்பற்றி சோவியத் யூனியன் மத்திய புள்ளி விவரக் குழு அண்மையில் அறிக்கை வெளியிட்டது. பொதுக் கல்விப் பள்ளிக்கூடங்களில் 3-கோடி 30-இலட்சம் மாணவர்கள் படிப்பதாக அறிக்கை கூறுகிறது. ஒரே வருடத்தில் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சம் அதிகரித்துள்ளது. பலதிறப்பட்ட கல்வி நிலையங்களிலும் 5-கோடிக்கு அதிகமான பேர் கல்வி கற்று வருகின்றனர். 1,06,000 இஞ்சினியர்கள், 2,60,000 தொழில் நுட்ப நிபுணர்கள், 1,25,000 விவசாய நிபுணர்கள், சுமார் 2,00,000 ஆசிரியர்கள், 1,00,000க்கு அதிகமான மருத்துவ ஊழியர்கள் உள்பட 8,60,000 இளம் நிபுணர்கள் சென்ற வருடம் மேற்கல்வி, உயர் நிலை விசேஷக் கல்வி நிறுவனங்களில் படித்துப் பட்டம் பெற்றிருக்கின்றனர். சோவியத் யூனியனில் பொதுக் கல்வியும் விசேஷக் கல்வியும் எத்தகைய சிறப்பான நிலையை எய்தியுள்ளன என்பதை இப்புள்ளி விவரங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

... கெ. சிங்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்